DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H. Selvanayagam Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

25வது ஆண்டை நோக்கி
Towards 25th Year in Publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
Tel : 416-752-1524
Fax: 416-752-6703


Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam Sales Representative
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tel : 647-344-6600

Ontario approved Pawn Brokers Pioneers and established leaders in the community
KANAGAAMBIKAI PAWN BROKERS
கனகாம்பிகை தங்கநகை அடகுமாடம்
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1269 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 31, 2020



## உலக நாடுகளில் கொரோனா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் தொகை நேற்று 17,578,701 ஆக உயர்ந்தது...

### உலகெங்கும் கொரோனாவினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 677,089 ஆக அதிகரித்துள்ளது...

### அமெரிக்காவில் 'கொரோனா' விற்கு பலியானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிப்பு...

அமெரிக்காவில் மொத்த இறப்பு: 155,349 பிரேசில்: 91,385 இந்தியா: 35,927 கனடா: 8,939

# Ontario reopens Schools in September, facilitating Health and Safety of Students and Staff

## மாணவர்களுக்கான தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் ஒன்றாரியோ மாகாணத்தின் பாடசாலைகள் செப்டம்பரில் மீண்டும் திறக்கப்படவுள்ளன.





எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் ஒன்றாரியோ மாகாணத்தில் இயங்கும் அனைத்துப் பாடசாலைகளையும் மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக நேற்று ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றமான 'குயின்ஸ்பார்க்கில்' அமைந்துள்ள முதல்வரின் அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் முதல்வர் டக் போர்ட் அவர்களும், கல்வி அமைச்சர் ஸ்ரீபன் லேய்சி அவர்களும் பல விபரங்களை வெளியிட்டனர். அத்துடன் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் தகுந்த பதிலளித்தனர்.

ஒன்றாரியோ பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக முதலில் மாகாணத்தின் பிரதம சுகாதார அதிகாரியோடும் கோவிட்-19 நோய் பரவல் தொடர்பான பணிகளில் ஈடுபட்டு வரும் மருத்துவத்துறை நிபுணர்கள் குழுவோடும் ஈடுபாட்டுடன் கூடிய கலந்துரையாடல்கள் பல நடத்தப்பட்டதாகவும், அந்த் கலந்துரையாடல்களிலிருந்து தான் பாடசாலைகளை மீண்டும் திறக்கும் திட்டத்திற்கான தரவுகள் பெறப்பட்டதாகவும் கல்வி அமைச்சர் தனது விளக்கவுரையில் தெரிவித்தார்.

நேற்றைய அறிவிப்பின் பிரகாரம், ஆரம்ப பாடசாலைகளும் உயர் பாடசாலைகளும் வாரத்தில் ஐந்து நாட்களும் இயங்கும் என்றும், நாலாம் தரத்திலிருந்து, பன்னிரெண்டாம் தரம் வரையிலும் உள்ள வகுப்புகளில் பயிலும் மாணவர்களும் அவர்களது ஆசிரியர்களும் அவசியம் முகக்கவசம் அணிதல் வேண்டும் என்றும் மாகாண அரசின் ஏற்பாடு தொடர்பாக தங்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கும், தங்கள் பிள்ளைகளில் பாதுகாப்பு மற்றும் நோய் பரவல் சம்பந்தமாக அவர்கள் முடிவுகளை மேற்கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாறான பாதுகாப்பு மற்றும் மருத்துவ பராமரிப்பு ஆகியவற்றின் மூலம் ஏற்படும் செலவுகளுக்காக ஒன்றாரியோ மாகாண அரசு மூன்று மில்லியன் டாலர்களை ஒதுக்கவுள்ளதாகவும் நேற்றைய அறிவிப்பின் போது, ஒன்றாரியோ முதல்வர் தெரிவித்தார்.

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000 Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

உங்கள் இல்லங்கள் அல்லது பண்ணை வீடுகள் ஆகியவற்றில் அழகிய முறையில் திருத்த வேலைகளைச் செய்து கொள்ள எம்மை அழையுங்கள்
Interior: Staircase Refinishing/Installation - Flooring Refinishing /Installation
Bathroom/Kitchen/Basement Renovations Additions & Extensions
Exterior : Fence/Interlock/Deck.
ZY RENOVATION
ZY-Renovation Call: Ethan @ 647 995 5955

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
✓ Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க...
மோகன் சுப்பிரமணியம்
Broker of Record / President
Direct Line: 416-321-2300 Office: 416-291-3000
6888 14th Avenue, Markham ON Independently owned and operated
PROPERTY MAX Realty Inc. Brokerage

# MORTGAGE SOLUTIONS

SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.64% | | $1,553.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,553.00 |



mortgageSolutions.ca

Kiruba Thanabalasingham

Mortgage Agent Lic#M12002440

Cell: 416.894.9122

Fax: 647.317.1511

info@mortgageSolutions.ca

Ultimate Mortgage Group. Lic#11995

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

GET APPROVED WITHIN 24 HOURS

416.894.9122

$375 Mo.

## MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Suganthy, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## தொழிற்சாலைக்கு வேலையாட்கள் தேவை

ஸ்காபுறோ நகரில
**Bellamy / Progress**
சந்திக்கு அருகாமையில் அமைந்துள்ள Doors & Windows தொழிற்சாலைக்கு மர வேலை மற்றும் Spray Paint செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவை.

**Call:**
**(416) 875-4119**

## SPOKEN ENGLISH

100% உத்தரவாதம்!
ஆங்கிலம் எதுவும் கதைக்கமுடியாதவர்கள் 2 மாதத்தில் சரளமாக பேச முடியும்
Letter writing, Essay writing, Citizenship exam preparation மற்றும் IELTS preparation.
நம்பிக்கையுடன் அழையுங்கள்

**துஸ்யந்தி:**
**(647) 606-1009**

## மரவேலை தொழிலாளர்கள் தேவை

ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் Ideal Stairs நிறுவனத்திற்கு தச்சுவேலை திறம்படச் செய்யக்கூடிய மரவேலைத் தொழிலாளர்கள் உடனடியாகத் தேவை. குறிப்பாக, மரத்தினாலான படிகள் (Stairs) செய்யும் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாக அழைக்கவும்.

**தொடர்பு:**
**(416) 830-3932**

உதயன் கதிரோட்டம்

# ஆவணி ஐந்தாம் திகதிய தேர்தலில் வாக்களிக்கச் செல்லுமுன்னர் கடந்த காலத்தைச் சற்று எண்ணிப் பாருங்கள்

இன்னும் சில நாட்களே இருக்கின்றன, இலங்கைப் பொதுத் தேர்தலுக்கு. தென்னிலங்கையிலும் தமிழர் பிரதேசங்களிலும் வேட்பாளர்கள் அதிகரித்தும் கட்சிகள், குழுக்கள் என பிரிவுகள் அதிகமாகி தடுமாறுகின்றது தேர்தல். வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பால் மடிந்து தொங்குகின்றன வாக்களிப்புப் பத்திரங்கள், மக்களின் தலைகள் ஏமாற்றங்களால் குனிந்தது போன்று.

தமிழர் பகுதிகளில் துயரங்களும் இழப்புகளும் தந்த வடுக்கள் மறையாது இருப்பினும், அவற்றைக் காணாதவர்கள் போல, வேட்பாளர்கள் வேகமாகவே பயணிக்கின்றார்கள் என்பது தெரிகின்றது. மண்ணிலும் புலம்பெயர்ந்த நாடுகளிலும் 'செருப்பு மாலைகளை' கழுத்தில் தாங்கிக் கொண்ட வேட்பாளர்கள் கூச்சம் எதுவுமின்றி கூவிக் கூவி வாக்குக் கேட்கின்றனர்.

வடக்கை எடுத்துக் கொண்டால் வீட்டுச் சின்னம் ஒரு பக்கமும் ஏனைய சின்னங்கள் இன்னொரு பக்கத்திலும் உள்ளதாகவே மக்களின் பார்வை உள்ளதாக அங்கிருந்து எழுதுகின்றவர்கள் பகிர்ந்து கொள்கின்றார்கள். பல அமைப்புக்கள் பகிரங்கமாகவே தங்கள் கருத்துக்களை வாக்களிப்பு விடயமாக முன்வைக்கின்றன. ஆனால் ஒரு அமைப்பு கூட வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து அவர்கள் வெற்றியீட்டி முன்னரைப் போன்றே இணக்க அரசியல் செய்யப்பட்டும் என்று முன்வந்து சொல்லியதாக இல்லை. இதற்கிடையில் தமிழர் பகுதிகளில் மக்கள் நலன் கருதி ஆரம்பிக்கப்பெற்ற □தமிழ்த் தேசிய பணிக்குழு□ வெளியிட்டுள்ள அறிக்கை இதே பக்கத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. பல விடயங்கள் அந்த அறிக்கையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

இராணுவம் எங்கள் மண்ணிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை நான்கு திசைகளிலிருந்தும் எழுகின்றபோது, எவ்வாறு சில தமிழ் பேசும் வேட்பாளர்கள் மிகுந்த இராணுவ பாதுகாப்போடு தமிழ் மக்களிடம் வாக்கு கேட்டு வருகின்றார்கள்? இந்த கேள்வியை உங்களிடமே கேட்டுவிட்டு நீங்கள் வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லுங்கள். உங்களுக்கு விடை கிடைக்கும். □தமிழ் தேசியக் கூட்டமைப்பால் இனியும் தமிழர்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை என்கின்ற தமிழ்த் தேசியப் பணிக்குழுவின் பதிவையும் மீண்டும் ஒரு தடைவ வாசித்துக் கொள்ளுங்கள். நன்றி!

# எத்தனையோ சந்தர்ப்பங்களை சுயநல அரசியலால் தவறவிட்டவர்கள் தமிழ் தேசியக் கூட்ட்டமைப்பினர்தான்

தமிழ் தேசியக் கூட்ட்டமைப்பால் இனியும் தமிழர்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை என்கிறது தமிழ்த் தேசியப் பணிக்குழு. சர்வதேச நெருக்கடிகளில் இருந்து அரசைப் பிணை எடுத்தவர்கள், ரணிலுக்குப் பதிலாக ராஜபக்சவுடன் இணைந்து மீண்டும் அதே பாதையில் பயணிக்கப் போவதாகக் கூறுபவர்கள் தமிழ் தேசியக் கூட்ட்டமைப்பினர். இவர்களால் இனியும் தமிழ் மக்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை.

எனினும். மிக நீண்ட காலமாக தமிழ் மக்கள் மத்தியில் செயற்பட்டு வரும் ஒரு பக்கச் சார்பற்ற அமைப்பு என்ற ரீதியில், இன்றைய கால கட்டத்தில் எங்களின் நிலைப் பாட்டை மக்கள் முன் வைக்க வேண்டியது எங்களின் கடமை என்று கருதுகிறோம்.

ஒரு நாடு இரு தேசம். கவர்ச்சியான கோசம். மக்களை உசுப்பேத்தும் சட்டத்துறை இளைஞர்கள். ஆனால் இலட்சியத்தை எப்படி வெற்றிகொள்வது என்கின்ற பாதைதான் அவர்களுக்கும் தெரியவில்லை. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பின்னால் அணிதிரளும்படி கூற வலுவான காரணங்கள் இல்லை.

தேசியக் கட்சிகள், அரச ஆதரவுக் கட்சிகளிடம் அபிவிருத்தி மட்டுமே இருக்கிறது. கெளரவமான நிரந்தர அரசியல் தீர்வு அவர்களால் முடியாதது. அதனால், அமைதியான, நிம்மதியான வாழ்வுக்கு அவர்கள் வழி காட்ட மாட்டார்கள்.

மீதம் இருப்பது ஒரே தெரிவு. அரசியல் தீர்வுக்கு ஒரு சர்வஜன வாக்கெடுப்பைக் கோருகிறார்கள். சர்வதேசத்தின் கவனத்தை திருப்பக் கூடிய சில தலைவர்கள் இருக்கிறார்கள். முன்னாள் போராளிக்கும் இடம் கொடுத்திருக்கிறார்கள். மாகாணசபையில் சில நல்ல தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்கள். அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை மக்கள் வழங்க வேண்டும்.

எங்கள் தெரிவும் மீன் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிதான்.

இவ்வாறு தமிழ்த் தேசியப் பணிக்குழுவின் செயலாளர் நாயகம் பரமசிவம் சிறீதரன் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ்மகன் ஒருவரின் நிர்வாகத்தில் இயங்கும் BisRing நிறுவனத்திற்கு விஜயம் செய்த கனடிய பாராளுமன்ற உறுப்பினர் Majid Jowhari

Richmond Hill MP Majid Jowhari made a visit at BisRing Office in Richmond Hill and the President of the Company Akilan Theva and his Staff Members were very excited to receive and chat with him.

As per the President Mr. Akilan Thava> the meeting was very productive and they were able to share their vision with the MP Majid Jowhari. BisRing's vision is to grow and help the real estate investors and home owners to be able to access all the real estate resources under single platform. BisRing also plans to expand their business across Canada and then US as they grow.

People, interested, could visit the following links to learn more about BisRing. https://bisring.com/ https://bisring.com/business-owner-registration www.bisring.com email: atheva@bisring.com

For phone contact, please call : 647-783-2571 or 613-983-7961




NEED HELP WITH YOUR TAXES? WE GOT YOU COVERED!!

உங்கள் வரித்தேவை, வியாபாரக் கணக்கு எதுவாயினும், திறமை, அனுபவம், தேர்ச்சி பெற்ற கணக்காளர்.

- Corporate Tax
- Personal Tax Planning
- Accounting
- Financial Statements
- Business Plan & Proposals
- For all your Business Needs



Call: 416 293 1616
416.438.9799
www.aricpa.ca · ari@aricpa.ca

MP Accounting & Finance Services Inc
1750 Brimley Road, Suite 213,
Toronto, ON. M1P 4X1

ARI A. ARIARAN CPA, CGA
Chartered Professional Accountant

மலேசிய மடல்:

# பெண்ணிய மறுமலர்ச்சி



நக்கீரன்

கோலாலம்பூர், ஜூலை 23:

ஐக்கிய இராச்சியத்தைப் போல மலேசியாவிலும் முடியாட்சி இயைந்த குடியாட்சி நடைபெற்றாலும் ஜனநாயக மாண்பிற்கு எவ்வித பங்கமுமில்லை. நீதிமன்ற நடைமுறையும் சட்டத்தின் ஆட்சியும் சீராக இடம்பெற்று மக்களின் உரிமைவாழ்விற்கு துணைபுரிகின்றன. இருந்தபோதும், மலேசியாவில் மறைமுக அடிமைத்தனமும் மானுட வர்த்தகமும் இடம்பெற்று வருகின்றன என்று மனித உரிமை ஆர்வலரும் சட்ட வல்லுநருமான கார்த்திகேசன் சண்முகம் தெரிவித்துள்ளார்.





மலேசிய அரசத் தமிழ் வானொலியான "ஆர்டிஎம்" மின்னல் பண்பலை வானொலியில் அன்றாடம் காலை ஆறரை மணி முதல் பத்து மணிவரை இடம்பெறும் காலைக்கதிர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசியபோது உடல் உறுப்பு வணிகம், தொழிலாளர் அடிமைத்தனம், பணி சுரண்டல், பாலியல் தொழில் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு மனிதக் கடத்தல் இடம்பெற்று வருவதாக கார்த்திகேசன் குறிப்பிட்டார்.



வெளிநாடுகளில் இருந்து மலேசியாவிற்கு கடத்துதல், மலேசியாவில் இருந்து மற்ற நாடுகளுக்கு கடத்துதல், உள்நாட்டிலேயே ஓர் இடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு கடத்துதல் என மூன்று வகையில் மனிதக் கடத்தல் இடம்பெறுகின்றன என்றார் அவர்.

மக்களிடையே நிலவும் சமுதாய ஏற்றத்தாழ்வு, குறிப்பாக பொருளாதார ஏற்றத்தாழ்வு, வேலை வாய்ப்பின்மை, அறியாமை போன்ற கூறுகளை மூலதனமாகக் கொண்டு எளிமையாக மனிதக் கடத்தல் இடம்பெறுகிறது. இவ்வாறு, மனிதக் கடத்தலில் ஈடுபடுவோருக்கு பேரளவில் பொருளீட்டும் அப்பட்டமான சுயநலம்தான் தலையாய இலக்கு.



இவ்வாறு மனிதக் கடத்தலுக்கு ஆளாகும் அப்பாவி மக்கள், அதில் இருந்து மீள்வது பெரும்பாலும் குதிரைக் கொம்புதான். குறிப்பாக, கடத்தப்பட்டு பாலியல் தொழிலில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்படுவோர் காலப்போக்கில் தங்களை தக அமைத்துக் கொள்வதும் உண்டு. இருந்தபோதும், காலம் தரும் படிப்பினை, எதிர்காலம் குறித்த விழிப்புணர்வு, தன்னம்பிக்கை, குடும்ப வறுமை, தன்னூக்கம், மான உணர்வு ஆகியத் தன்மையைக் கொண்டுள்ளவர்கள் மலைகளுக்கு இடையேயான மடுவைப் போன்ற அத்தகைய பேரிடரில் இருந்து மீண்டு வருவதும் உண்டு.




மலேசியாவைப் பொறுத்தவரை, வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கான தேவை தொடர்ந்து நீடித்து வருகிறது. தொழில் துறை, கட்டுமானம், வர்த்தகத் துறைகளைத் தவிர வீட்டுப் பணிப்பெண்களுக்கான தேவையும் மிகுதியாக உள்ளது. இதற்கு இரு அம்சங்கள் முக்கியமாக அடிப்படையாக இருக்கின்றன. பெரும்பாலான பெண்கள் வேலைக்குச் செல்வதும் கூட்டுக் குடும்ப அமைப்பு சிதைந்து விட்டதும்தான் அந்த இரு முகாந்திரமான காரணங்கள்.

இன்றைய கல்வி-அறிவியல் யுகத்தில் அநேகமாக அனைத்துப் பெண்களும் கல்வி அறிவு பெறுவதால், பொருளாதார சூழலைக் கருதி எல்லாப் பெண்களும் பணிக்குச் செல்கின்றனர். இப்படி வேலை தேடும் படலத்தாலும் நகரிய வாழ்க்கை முறையாலும் கூட்டுக் குடும்ப அமைப்பு இயல்பாக சிதறும் நிலைக்கு ஆளாகி பல பத்தாண்டுகள் ஆகிவிட்டன.



ஆட்கடத்தலில் ஈடுபடுவோர் இதை சாதகமாக பயன்படுத்திக் கொள்கின்ற-னர். வெளிநாடுகளில் வாழும் வறிய மற்றும் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் வேலைதேடுவோரும் உள்ளூர் முகவர்களால் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு மிகுதியான சம்பளம், நல்ல வாழ்க்கை என்றெல்லாம் ஆசை வார்த்தைகள் மூலம் வாக்குறுதி அளிக்கப்பட்டு ஆர்வம் ஊட்டப்படுகின்றனர்.

இதனால், எதிர்கால நம்பிக்கை வெளிச்சத்தை நினைத்துப் பார்க்கும் அத்தகையோர், கைவசம் இருக்கும் சொற்ப ஆபரணங்களையும் மற்ற உடைமைகளையும் விற்று உள்ளூர் முகவர்களிடம் கொடுத்து விடுகின்றனர். அந்த முகவர்களோ, அலுங்காமல் குலுங்காமல் அவர்களை மலேசியாவிற்கு அழைத்து வந்து உள்ளூர் முகவர்களிடம் ஒப்படைக்கின்றனர். இதை வேறு வகையில் சொல்வதென்றால் விற்று விடுகின்றனர்.



அப்படி பெண்களையும் தொழிலாளர்கலையும் வாங்கும் உள்நாட்டு முகவர்கள், மறைமுகமாக விலைக்கு வாங்கப்பட்டவர்களின் தகுதி, தோற்றம், வயது, கல்வி போன்றவற்றின் அடிப்படையில் தொழிற்சாலை, வீடு, உடம்பு பிடித்துவிடும் நிலையம் என்றெல்லாம் வேலைக்கு அனுப்பி விடுகின்றனர் அதாவது விற்று விடுகின்றனர்.



அவ்வாறு செல்லும் தொழிலாளர்கள் நீண்டகாலம் ஊதியம் இன்றி உணவை மட்டும் பெற்றுக் கொண்டு உழைக்க நேரிடுகிறது. உள்நாட்டு முகவர், மலேசிய முகவர் ஆகியத் தரப்பினரின் தொடர்பு அற்றுவிட்ட நிலையில், மூன்றாம் தரப்பினரிடம் சிக்கிக் கொள்ளும் இப்படிப்பட்டவர்கள் ஏறக்குறைய அடிமைத்தனத்திற்கும் உழைப்பு சுரண்டலுக்கும் ஆளாக்கப்படுகின்றனர்.

வெளிநாட்டினரை பணிக்கு அமர்த்துவோர், அதற்காக தாங்கள் உள்நாட்டு முகவரிடம் செலுத்திய தொகைக்கு உழைத்து ஈடுகட்டும்படி சம்பந்தப்பட்ட தொழிலாளர்களை வலியுறுத்துகின்றனர். மொத்தத்தில், ஜனநாயாக முறையில் மக்களாட்சி மலர்ந்து மணம் பரப்பும் இன்றைய சுழலிலும் ஆண்டான்-அடிமைத் தனம் இடம்பெறுவதற்கு மனித வர்த்தகத்தில் ஈடுபடுவோர் காரணமாக உள்ளனர்.




கைவசம் இருந்த பொன்னையும் பொருளையும் இழந்து, ஆள்மாறி இடம்மாறி கடைசியில் சம்பந்தமே இல்லாத ஓரிடத்தில் அடிமைப்படும் அவலம் அன்றாடம் என்றில்லாமல் ஒவ்வொரு வேளையும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது.

இதற்கான கட்டமைப்பும் சங்கிலித் தொடர் நடவடிக்கையும் ஓர் உணவகத்தில் உணவருந்தும் வேளையிலோ அல்லது ஒரு குவளை தேநீர் பருகும் நேரத்தில்கூட வடிவமைக்கப்படுகிறது. இதேக் கட்டமைப்பில் மலேசியாவில் இருந்து வேறு நாடுகளுக்கு மனிதர்களைக் மறைமுகமாகக் கடத்துவது, அல்லது விற்பது அல்லது அடிமைத்தனத்திற்கு ஆட்படுத்தும் நடவடிக்கையும் தொடர்கிறது.

இதில், மருத்துவ துறை சார்ந்து உடல் உறுப்புகளுக்காகவும் இத்தகைய நடவடிக்கை தொடர்ந்து கொண்டுதான் உள்ளன. மொத்தத்தில், சுரண்டல், பாலியல் தொழில், அடிமைத்தனம் ஆகியவற்றின் மூலம் இலாப நோக்கத்தை முதன்மையாக்க கொண்ட சுயநல மனிதர்களிடம் இருந்து தப்பிக்க வேண்டும் என்றால் பொதுமக்களுக்கு போதிய விழிப்புணர்வும் எச்சரிக்கை உணர்வும் மிகமிகத் தேவை என்று வலியுறுத்திய சமூகவாதியுமான கார்த்திகேசன், மலேசியாவைப் பொறுத்தவரை இப்படிப்பட்ட மனிதக் கடத்தல், மறைமுக அடிமைத்தனம், சுரண்டல் போன்ற நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான சட்டங்கள் நடைமுறையில் உள்ளதாகவும் தெரிவித்தார். குறிப்பாக, குழந்தைக் கடத்தலுக்கு எதிரான சட்டம் முழு வீச்சில் அமலில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.





மனித உரிமை தொடர்பான சட்டத்தின் 12-ஆவது பிரிவு குழந்தைக் கடத்தலுக்கு எதிரானது 13-ஆவது பிரிவு குழந்தைகள் மற்றும் பெரியவர்களைக் கடத்துதல் மற்றும் அவர்களின் மனித உரிமை மீறலுக்கு எதிரானது 14-ஆவது பிரிவு, குழந்தை கடத்தலில் ஈடுபடுவோருக்கு 20 ஆண்டுகள் வரையிலான சிறைவாசத்துடன் தண்டத்தையும் அளிக்கக்கூடியது அதைப்போல மனிதக் கடத்தல்வழி இலாபம் அடைந்தவர்களுக்கு எதிரான தண்டனையை 15-ஆவது பிரிவு வழங்குகிறது என்றெல்லாம் நேரடி ஒலிபரப்பின்வழி விளக்கம் அளித்த வழக்கறிஞரும் வழக்குரைஞருமான கார்த்திகேசன் சண்முகத்தை, நிகழ்ச்சியை வழிநடத்திய மின்னல் பண்பலை வானொலி அறிவிப்பாளர்களான தெய்வீகன் தாமரைச்செல்வன், சுகன்யா சதாசிவம் இருவரும் பாராட்டினர்.






உண்மையில், கொடிய ஆட்கொல்லி கிருமியான கோவிட்-19இன் தாக்கத்தில் இருந்து நாடு மெல்ல மீட்சி காண முனைந்துள்ள இந்த வேளையில், காலம் கருதி, சமூக அக்கறையுடன் பொருத்தமான ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து அதன்வழி சமுதாயத்திற்குத் தேவையான விழிப்புணர்வை பொறுப்பான வகையில் வழங்கிய மின்னல் பண்பலை வானொலியின் அறிவிப்பாளர்கள் சமுதாயத்தின் பாராட்டிற்கு உரியவர்கள்.

எல்லாவற்றையும்விட, இதற்கெல்லாம் ஆதாரமாக இருந்து வழிகாட்டிவரும் அரசத் தமிழ் வானொலிப் பிரிவின் நிருவாகி திருமதி. சுமதியும் பாராட்டிற்கு உரியவர்.

*நக்கீரன் - Nakkeeran 013-244 36 24*


## தொழில் வாய்ப்பு

கனேடிய தமிழர் வலுவளர் அமைப்பு குறுகிய கால மாற்றுத்திறனாளிகள் சமுதாய உதவித்திட்டத்தில் கடமையாற்ற தகுதி வாய்ந்த நபர்களைத் தேடுகின்றனர். இத்திட்டம் ஆகஸ்ட் மாதம் முதல் நவம்பர் இறுதி வரை நடைபெறும். அதிகமாக தொலைபேசி-சூம் மூலமே செயலாற்றப்படும். இதற்கான நிதி கோவிட் 19 அவசரகால சமுதாய உதவித்திட்டத்தின் கீழ் கனேடிய அரசாங்கத்தினால் செஞ்சிலுவைச் சங்கம், கனேடிய தொழில்வாய்ப்பு, சமுதாய அபிவிருத்தி சபை மூலம் தரப்பட்டுள்ளது.

1. **திட்ட நிர்வாகி:** எண் 1. சமுதாயத் தொடர்பு சேவையாளர் சேகரிக்கும் தகவல்களை ஒருங்கிணைத்து முடிவில் அறிக்கை தயாரித்தல்.
ஊதியம்: மணிக்கு 20 டொலர். வாரம் 21 மணித்தியாலம்

2. **சமுதாயத் தொடர்பு சேவையாளர்:** எண் 3. தொலைபேசி மூலம் மாற்றுத்திறனாளிகள் குடும்பத்தினருடன் தொடர்பு கொண்டு வரையறுக்கப்பட்ட ஆவணத்தின்படி தகவல்கள் சேகரித்து திட்ட நிர்வாகியிடம் கையளிக்க வேண்டும்.
ஊதியம்: மணிக்கு டொலர் 15, வாரம் 28 – 35 மணித்தியாலம்

முடிவு திகதி: ஆகஸ்டு 5, 2020

கனேடிய தமிழர் வலுவளர் அமைப்பு 1997ம் ஆண்டு அனைத்து மாற்றுத்திறனாளிகளையும் உள்ளடக்கிய இலாப நோக்கற்ற அமைப்பாக மாற்றுத்திறனாளித் தமிழரால் அமைக்கப் பட்டது. இதன் செயல்திட்டங்கள் யாவும் தொண்டர்களாலேயே செயலாற்றப்படுகிறது. மாற்றுத்திறனாளிகள் தங்கள் முழுமையான ஆற்றல் வளங்களை அடைய உதவுவதோடு, அவர்கள் குடும்பத்தினருக்கும் ஒத்தாசை வழங்குகிறோம்

அமைப்பின் வேறு விபரங்களுக்கும், தொழில் வாய்ப்புப் பற்றிய மேலதிக விபரங்களுக்கும் எமது இணையதளத்தைப் பார்க்கவும்.

http//:www.octd.ca

# தேர்தலை நேர்மையாக நடத்துவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம் என்கிறார் யாழ்ப்பாண அரச அதிபர்



எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை நீதியாகவும், நேர்மையாகவும், நடுநிலைமையாகவும் நடாத்துவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியம் என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அரசாங்க அதிபர் க. மகேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தலுக்கான நடவடிக்கைகள் யாவும் தற்போது பூரண படுத்தப்பட்டுள்ளன, இறுதிக் கட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேர்தலில் பங்குபற்றும் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகளும் எம்மால் முன்னெடுக்கப்பட்டுள்ளன பயிற்சிகள் சிரேஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் கனிஷ்ட தலைமை தாங்கும் உத்தியோகத்தர்களுக்கு மற்றும் வலய தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்கள், விசேடமாக சுகாதார நடைமுறை ஏற்பாடுகளை மேற்கொள்கின்ற உத்தியோகத்தர்களுக்குரிய பயிற்சிகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ஆளணி கட்டுப்பாடு, போக்குவரத்து, மண்டப ஒழுங்கு மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் பொது வசதிகள் போன்ற சகல நடவடிக்கைகளும் அனேகமாக பூரணப் படுத்தப்பட்டு விட்டன தற்போது இறுதி கட்ட நடவடிக்கைகளில் நாங்கள் ஈடுபட்டிருக்கின்றோம். இந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் சுமார் 7ஆயிரத்து 795 உத்தியோகத்தர்கள் யாழ் மாவட்டத்தில் தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளார்கள் 508 வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

அதே போல இந்த தடவை வாக்கெண்ணும் நிலையங்கள் இரட்டிப்பாக்கப்படவுள்ளது 89நிலையங்களில் இந்த வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளது அதில் 73 சாதாரண வாக்களிப்பு நிலையங்களும் 16 தபால்மூல வாக்கெண்ணும் நிலையங்களாக இந்த தடவை அமைத்திருக்கின்றோம். இந்த தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணி 29 ம்திகதியுடன் முடிவடைந்தது எனினும் வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் தபால் நிலையங்களுக்கு சென்று தங்களுடைய அடையாளத்தை உறுதிப்படுத்தி பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பிரச்சார நடவடிக்கைகள் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் முடிவடைய உள்ளன ஏற்றுக்கொள்ளப்பட்ட விதத்திலே அவர்களுடைய பிரச்சாரங்கள் இடம்பெறுவது நல்லது. இந்த தேர்தலிலே மொத்தமாக 330 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஏழு.

தேர்தல் வாக்கெடுப்பு தினமாகிய ஐந்தாம் திகதி அதிகாலையிலேயே சகல வாக்காளர்களும் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தங்களுடைய வாக்குகளை செலுத்த வேண்டும் இது அவர்களுடைய ஒரு ஜனநாயக கடமை ஆகவே சகல வாக்காளர்களும் தங்களுக்கு உரித்தான அந்த உரிமையை அவர்கள் நீதியாகவும் நியாயமாகவும் அந்த உரிமையை செயற்படுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். சகல வாக்காளர்களும் அதிகாலையிலேயே சென்று எந்தவித பயமுமின்றி வாக்களிப்பினை மேற்கொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்கின்றேன் அத்தோடு நேரத்திற்கு சென்று உங்களுடைய வாக்களிக்குமாறு நான் கோரிக்கை விடுகின்றேன். வாக்களிப்பு நிலையங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை பின்பற்றி உங்களுடைய வாக்குகளை அளிக்க முடியும் மேலும் தங்களுடைய வாக்குரிமையை இந்தச் சந்தர்ப்பத்திலே சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் இந்த பொதுத் தேர்தலை நீதியாகவும் நியாயமாகவும் நடுநிலையாகவும்
நடாத்துவதற்குரிய சகல ஏற்பாடுகளும் எம்மால்மேற்கொள்ளப்பட்டுள்ளது இதனைவிட
தேர்தல் ஆணையகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள விடயங்களும் எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது எனவே வாக்காள பொதுமக்கள் தங்களுடைய வாக்களிப்பு உரிமையை சிறப்பாக பயன்படுத்திகொள்ள வேண்டும்.
தேர்தலில் போட்டியிடுகின்ற சகல கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தங்களுடைய செயற்பாடுகளை தேர்தல் சட்டத்தை மதித்து செயல்படவேண்டும். தேர்தல் நீதியாகவும்
நேர்மையாகவும் நடுநிலையானதாகவும் நடாத்துவதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பும் தேவை எனவே அனைவரும் இதற்கு ஒத்துழைக்குமாறு நான் கோரிக்கை விடுகின்றேன்" என்றார்.

# தாறுமாறாக உயரும் தங்கத்தின் விலை் காரணம் என்ன?

உலகம் முழுக்க கோவிட்-19 எனப்படும் கொரோனா பெருந்தொற்று அபாயம் நீடித்துக்கொண்டே இருக்கையில், வர்த்தகம் கடுமையாக முடங்கிக்கிடக்கிறது. இந்தியாவில் திருமணம் போன்ற சுபநிகழ்வுகள் தள்ளிப்போடப்படுகின்றன. அல்லது எளிமையாக நடத்தப்படுகின்றன. அடுத்தடுத்த பொதுமுடக்கத்திற்குப்பின் அளிக்கப்பட்ட தளர்வுகளால் வர்த்தக நிறுவனங்கள் திறக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் விற்பனை பெரிய அளவில் இல்லை. குறிப்பாக 2 மாத மூடலுக்குப்பின் நகைக்கடைகள் திறக்கப்பட்டுள்ள போதிலும், வியாபாரம் பெரிய அளவில் இல்லை.

ஆனால் தங்கத்தின் விலை நாளுக்கு நாள் இறக்கை கட்டிப் பறந்துகொண்டு இருக்கிறது. வாங்குவதற்கே ஆள் இல்லாதபோது, தங்கத்தின் விலை எப்படி உயரும்? அதிலும் முழுஊரடங்கின்போது நகைக்கடை ஒன்று கூட திறக்கப்படவில்லை. ஆனால் அப்போதே தங்கத்தின் தாறுமாறான விலை உயர்வு ஆரம்பித்து விட்டது.கொரோனா பொதுமுடக்க தொடக்கத்திற்கு முன் (மார்ச் மாத மத்தியில்) ஒரு பவுன் (8 கிராம்) தங்கத்தின் விலை ரூ.23 ஆயிரம் முதல் ரூ.24 ஆயிரத்திற்குள் ஏறுவதும் இறங்குவதுமாக இருந்தது.பொதுமுடக்கம் தொடங்கவும் தங்கத்திற்கு இறக்கை முளைக்க ஆரம்பித்து விட்டது. பறந்தது... பறந்தது... இன்று வரை பறந்து கொண்டே இருக்கிறது. ஜூலை 28-ந்தேதியான இன்றைய தினம் ஒரு கிராம் தங்கத்தின் விலை ரூ.5,015 ஆகி விட்டது. ஒரு பவுன் விலை ரூ.40,120. அதாவது இந்த பொதுமுடக்க காலத்தில் ஒரு பவுனுக்கு ரூ.17 ஆயிரம் வரை உயர்ந்து இருக்கிறது. வரலாற்றில் இப்படி ஒரு உயர்வை மக்கள் சந்தித்திருக்கவே முடியாது.

பொதுவாக ஒரு பொருளுக்கு கிராக்கி இருக்கும்போது தான் விலை உயர்வது வழக்கம். இப்போது சாமானியர்களுக்கு சாப்பாட்டுக்கே பிரச்சினை. வசதி படைத்தவர்களுக்கு உயிரைக்காப்பாற்றிக் கொள்ளவேண்டுமே என்ற சிந்தனை. இதனால் வெளியே வராமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக்கிடக்கிறார்கள். அப்படி இருக்கும்போது ஏனிந்த தாறுமாறான விலை உயர்வு?

பொருளாதார அறிஞர்கள்சொல்லும் கருத்து: "பங்குச்சந்தை நிலவரம் நன்றாக இல்லாதபோதும், வட்டிவிகிதம் குறைவாக இருக்கும்போதும் தங்கத்தின் விலை ஏறவேசெய்யும். கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சி அடையும்போதும் தங்கத்தின் விலை ஏறுமுகத்திலேயே காணப்படும். தங்கத்தின் விலை ஏற்றஇறக்கத்தை கட்டுப்படுத்த ஒழுங்குமுறை அமைப்பு எதுவும் கிடையாது. உலகையே நடுங்கவைத்துள்ள கொரோனா பெருந்தொற்றினால் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு சர்வதேச நிகழ்வுகளால் மிகக் குறுகிய காலத்தில் தங்கத்தின் விலை இந்த அளவு உயர்ந்து விட்டது. கொரோனாவுக்கு தடுப்பூசி பயன்பாட்டுக்கு வந்து சுகாதார அடிப்படையில் ஒரு தீர்வு எட்டப்படும் வரையில் தங்கத்தின் விலை புதுப்புது உச்சங்களைத் தொடவே வாய்ப்பு உள்ளது."

பொருளாதார அறிஞர்களின் கருத்து இவ்வாறு இருப்பதைக் காணும்போது, தடுப்பூசி வந்தால் தான் உயிர் பயமும் நீங்கும் தங்கத்தின் விலை உயர்வு இறக்கையும் வெட்டப்படும் என்றே தோன்றுகிறது. போகிற போக்கைப்பார்த்தால் பவுன் விலை ரூ.50 ஆயிரத்தை நோக்கி பயணப்படுமோ என்ற அச்சமும் நிலவுகிறது.

பொதுவாக தமிழகத்தாய்மார்கள் குன்றிமணித் தங்கமாவது தம் பிள்ளைகளுக்குபோட்டு அழகு பார்க்கவேண்டும் என்று ஆசைப்படுவார்கள். அதுவெல்லாம் இனிவெறும் கனவே. தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைகளுக்கு தங்கம் என்று பெயர் சூட்டி மட்டுமே அழகு பார்க்கும் காலத்தை நோக்கிச்சென்று கொண்டு இருக்கிறோம் என்பதே இன்றைய எதார்த்தம்.

*-- மணிராஜ்,*
*திருநெல்வேலி*

# ஹஜ் புனித யாத்திரை தொடங்கியது ஆனால் வெளிநாட்டினருக்கு அனுமதியில்லை

சவுதி அரேபியாவில் ஹஜ் புனித யாத்திரை கடும் கட்டுப்பாடுகளுடன் தொடங்கியது. இந்தாண்டு மக்காவில் உள்ள புனித தலத்திற்குள் முதல் கட்டமாக 20 பேர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். அனைவரும் முகக் கவசத்துடன், தனிமனித இடைவெளியை கடைப்பிடித்து தொழுகை நடத்த அனுமதிக்கப்பட்டனர். ஒவ்வொரு ஆண்டும் 25 லட்சத்துக்கும் மேற்பட்டோர் ஹஜ் புனித பயணம் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில், கொரோனா பயம் காரணமாக இந்த ஆண்டு ஆயிரத்துக்கும் குறைவான பயணிகள் மட்டுமே புனித யாத்திரை மேற்கொள்ள சவுதி அரசு அனுமதி வழங்கியுள்ளது. கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள 6 வளைகுடா நாடுகளைச் சேர்ந்தவர்கள் மெக்காவிலும் மதீனாவிலும் புனிதப் பயணம் மேற்கொள்ளவும் தடை விதிக்கப்பட்டிருந்தது. அனைவருக்கும் கொரோனா சோதனை நடத்தப்பட்டு, தனிமைக் காலம் முடிந்த பிறகே ஹஜ் யாத்திரை செல்ல முடியும். அந்த நாட்டு குடிமக்களையும், அங்கு தங்கியிருக்கும் வெளிநாட்டினரை மட்டும் ஹஜ் பயணம் செய்ய அனுமதி அளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



**இலங்கை செய்திகள்**

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

# நாடாளுமன்றத் தேர்தலும் புலம் பெயர்ந்த தமிழர்களும்



எனது நண்பர் ஒருவர் பகிடியாகக் கேட்டார் "இந்த முறை சுமந்திரனைத் தோற்கடிக்க வேண்டும் என்று புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்புக்கள் அதிகரித்த அளவில் பாடுபடுவதாக தெரிகிறது. இப்படித்தான் கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போதும் புலம் பெயர்ந்த தமிழ்த் தரப்புகள் சுமந்திரனை தோற்கடிக்க வேண்டும் என்று கடுமையாக உழைத்தன. ஆனால் விளைவு எதிர்பார்த்ததற்கு மாறாக அமைந்தது. இந்த முறை சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் எதிராகப் புலம் பெயர்ந்த தரப்பிலிருந்து முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளைத் தொகுத்துப் பார்த்தால் போன முறை மாதிரி இந்த முறையும் சுமந்திரன் வென்று விடுவாரோ என்று யோசிக்க வேண்டியிருக்கிறது" என்று.

சுமந்திரன் என்ற ஒரு மனிதனுக்கு எதிராக மட்டுமல்ல அதற்கும் அப்பால் தாயக அரசியலின் மீது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் ஈடுபாடு எனப்படுவது கடந்த பல தசாப்தங்களாக நிர்ணயகரமான ஒன்றாகக் காணப்படுகிறது. 2009க்கு பின்னரான தமிழ் மிதவாத அரசியலின் மீது புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகம் அதிகரித்த அளவில் செல்வாக்கைப் பிரயோகிக்க முற்பட்டு வருகிறது. இதன் விளைவுகள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் இபொழுது தாயக அரசியலில் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பங்கீடுபாடு என்பது ஒரு தவிர்க்கப்பட முடியாத ஒரு பகுதியாகவே மாறிவிட்டது.

கடந்த பதினோரு ஆண்டுகளாக புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் தாயகத்தின் அரசியலின் மீது இரண்டு தளங்களில் செல்வாக்குச் செலுத்தி வருகிறது. முதலாவது

ஜெனிவாவை மையமாக கொண்ட ஓர் அரசியற் களம். இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியை தேடுவதற்கான அரசியலில் அதிகம் பங்களிப்பைச் செய்ததும் அதிகம் துடிப்போடு செயல்படுவதும் தமிழ் டயஸ்போறாதான். இது விடயத்தில் கடந்த பதினொரு ஆண்டுகளில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவிலான நண்பர்களை தமிழ் டயஸ்போறா அனைத்துலக அளவில் சம்பாதித்திருக்கிறது. எனினும் இது விடயத்தில் ஒருங்கிணைந்த செயற்பாடு இல்லை என்ற ஒரு விமர்சனம் உண்டு.

இரண்டாவது தளம் தாயகம். கடந்த 11 ஆண்டுகளாக தாயக அரசியலின்

மீது புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் பல்வேறு பரப்புக்களில் ஈடுபாடு காட்டி வருகிறது.

தமிழ்க் கட்சிகளை நிதி ரீதியாக பலப்படுத்துவது; தமிழ்த் தேசியக் கட்சிகளை ஐக்கியப்படுத்துவது ; பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுக்கு நிதி ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் உதவுவது; பல்கலைக் கழக மாணவர்களின் போராட்டங்களுக்கு நிதி ரீதியாக உதவுவது; தமிழ்க் கட்சிகளின் தேர்தல் பிரச்சாரங்களில் நேரடியாகவும்

மறைமுகமாகவும் பங்கெடுப்பது; தமிழ்ச் செயற்பாட்டாளர்களுக்கு நிதி ரீதியாகவும்

தார்மீக ரீதியாகவும் உதவி செய்வது; தமிழ் மக்கள் மத்தியில் செயற்படும் மக்கள் இயக்கங்களுக்கு உதவி செய்வது.......என்று கடந்த பதினொரு ஆண்டுகளாக தாயகத்தில் முன்னெடுக்கப்படும் அனேகமாக எல்லா அரசியல் நடவடிக்கைகளிலும் புலம் பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்பு எதோ ஒரு விகிதமாவது இருக்கும்.

இவ்வாறான ஒரு பின்னணியில் வரும் ஐந்தாம் திகதி நடக்கவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் புலம் பெயர்ந்த தமிழ்த் தரப்புக்கள் தாயகத்தில் உள்ள கட்சிகள் ; வாக்காளர்கள்; கருத்துருவாக்கிகள் மீது எதோ ஒரு விதத்தில் செல்வாக்கைப் பிரயோகிக்க முயல்கின்றன. குறிப்பாக தமிழ் அரசியலில் அதிகம்

சர்ச்சைக்குரியவராக மாறியிருக்கும் சுமந்திரனை தோற்கடிப்பதற்கென்றே ஒரு பெரிய அணி புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவரைத் தோற்கடிப்பதற்கான வியூகங்களை கட்சிகளுக்கு வகுத்துக் கொடுப்பது. அது தொடர்பான பிரச்சாரங்களுக்கு நிதி உதவி வழங்குவது. போன்ற இன்னோரன்ன விடயங்களில் சுமந்திரன் என்ற ஒரு மனிதனுக்கு எதிராக டயஸ்போறா அமைப்புகளும் தனிநபர்களும் தனித்தனியாகவும் கூட்டாகவும் செயற்படக் காணலாம். அதேசமயம்

சுமந்திரனுக்கு ஆதரவான ஓரணியும் வேகமாக இயங்குகிறது. எனினும் ஒப்பீட்டளவில் சுமந்திரனுக்கு எதிரான அணி அதிகம் துடிப்பாக இயங்குகிறது. இந்த அணி கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகிய இரண்டு கட்சிகள் மீதும் ஏதோ ஒருவிதத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தனது செல்வாக்கை பிரயோகித்து வருகிறது.

தமிழ் புலம்பெயர்ந்த சமூகத்தின் மேற்கண்டவாறு முயற்சிகள் வெற்றி பெறுமா இல்லையா என்பது அடுத்த கிழமை தெரிய வரும். இதில் கிடைக்கக் கூடிய வெற்றிகளை அல்லது தோல்விகளை குதிரைப் பந்தயத்தில் பணத்தை முதலீடு செய்து கிடைக்கும் வெற்றி தோல்விகளோடு நாம் ஒப்பிடத் தேவையில்லை. மாறாக மேற்கண்டவாறான புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தின் ஈடுபாட்டை மேலும் எப்படி ஆக்கபூர்வமானதாகவும் நாண்டகால நோக்கிலானதாகவும் திட்டமிடுவது என்று சிந்திக்க வேண்டும்.

இம்முறை தேர்தலில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து சென்ற குகதாசன் திருமலை மாவட்டத்தில் கூட்டமைப்பின் இரண்டாம் நிலைப் பிரதானியாக போட்டியிடுகிறார். அவரை அவ்வாறு பரசூட் மூலம் இறக்கியது குறித்து தமிழரசுக் கட்சியின் உள்ளூர் மட்டங்களில் கடுமையான அதிருப்தி நிலவுகிறது. ஆனால் குகதாசன் தேர்தலில் போட்டியிடுவது எனப்படுவது ஒரு செய்தியைக் கூறுகிறது. புலம்பெயர் தமிழ்ச் சமூகம் தாயக அரசியலில் நேரடியாக இறங்கும் ஒரு நிலைமையை

இது காட்டுகிறது. இது தவிர்க்க முடியாததும் கூட. ஏனெனில் தமிழ்ச் சனத்தொகையில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதி புலம் பெயர்ந்து விட்டதாக ஒரு கணிப்பு உண்டு. அல்லது நான்கு பேர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் தமிழர்கள் புலம்பெயர்ந்து விட்டதாக ஒரு கணிப்பு உண்டு. அதாவது தமிழ் வாக்காளர்களில் நாலில் ஒரு பகுதியளவு புலம்பெயர்ந்து விட்டது. கடந்த ஆண்டின் இறுதியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலுக்காக ராஜபக்சக்கள் புலம்பெயர்ந்து வாழும் ஒரு தொகுதி சிங்கள மக்களை வாக்களிக்கத் தூண்டியதை இங்கு சுட்டிக் காட்டலாம்.

தமிழர்களில் ஒரு தலைமுறையைச் சேர்ந்த துணிச்சலான அர்ப்பணிப்பு மிக்க போராட்ட அனுபவம் உள்ள குறிப்பிடத்தக்க அளவு தொகையினர் புலம் பெயர்ந்து வாழ்கிறார்கள். இவர்களுக்கு ஆயுதப் போராட்டத்தின் அனுபவமும் உண்டு. புலம்பெயர்ந்து வாழும் நாட்டின் ஜனநாயக அனுபவமும் உண்டு. இந்த இரண்டு கொழுத்த அனுபவங்களினதும் தொகுப்பாகக் காணப்படும் அவர்கள் தாயக அரசியலில் ஈடுபடும் பொழுது அது புதிய குருதிச் சுற்றோட்டங்களை ஏற்படுத்தும். யூதர்களின் அரசியலில் அதுதான் நடந்தது. எனவே புலம்பெயர்ந்த தமிழர்கள் தாயக அரசியலில் இறங்குவது என்பது தவிர்க்க முடியாத ஒன்று. அவர்கள் பரசூட் மூலம் இறக்கப்படாதவரை அதை வரவேற்க வேண்டும். இது முதலாவது.

இரண்டாவது, ஒவ்வொரு தேர்தலின் போதும் புலம்பெயர்ந்த தமிழர்கள் தனிப்பட்ட ரீதியாகவும் அமைப்பு ரீதியாகவும் கட்சிகளுக்கு காசை வழங்குகிறார்கள். இது ஏறக்குறைய பந்தயக் குதிரைக்கு காசைக் கட்டுவது போலிருக்கக் கூடாது. இந்த பொறிமுறை தவறு. மாறாக தமிழ் அரசியலில் நீண்டகால நோக்கில் எவ்வாறு அறிவையும் காசையும் உழைப்பையும் அர்ப்பணிப்பையும் முதலீடு செய்யலாம் என்று புலம்பெயர் தமிழ்ச் சமூகம் சிந்திக்கலாம்.

பெரும்பாலான தமிழ் கட்சிகள் தேர்தல்களின்போது தமது வேட்பாளர்களை மேலிருந்து கீழ்நோக்கி இறக்குகின்றன. இவ்வாறு பரசூட் மூலம் இறக்கப்படும் பிரமுக வேட்பாளர்களை தரையிறக்குவது தவறான ஒரு பொறிமுறை. பதிலாக கீழிலிருந்து மேல்நோக்கித் தலைமைத்துவம் கட்டியெழுப்பப்பட வேண்டும். அதாவது உள்ளூர்த் தலைவர்களை முதலில் உற்பத்தி செய்ய வேண்டும். அவ்வாறு உள்ளூர்த் தலைவர்களை உற்பத்தி செய்யத்தக்க விதத்தில் தமிழ் அரசியற் சூழலை பண்படுத்தி வளப்படுத்த வேண்டும். ஆங்கிலத்தில் சொன்னால் - cultivate - பயிரிடத்தக்க விதத்தில் நிலத்தைப் பண்படுத்துவது; வளப்படுத்துவது. நீண்டகால நோக்கில் தமிழ் வாக்காளர்களை விமர்சன பூர்வமாக சிந்திக்கும் ஒரு மக்கள் தொகுதியாக பண்படுத்த வேண்டும். இது ஒரு தேர்தல் பிரச்சாரக் காலத்துக்குள் செய்து முடிக்கக் கூடிய காரியம் அல்ல. அதற்கு நீண்ட காலம் எடுக்கும். ஒரு பயிரை நட்டு வளர்ப்பதைப் போன்றது. ஒரு தோப்பை உருவாக்குவதைப் போன்றது. எனவே அவ்வாறு நீண்ட கால நோக்கில் தமிழ் அரசியலில் நிர்ணயகரமான மாற்றங்களை ஏற்படுத்தத் தக்க நீண்டகாலத் திட்டங்களை வகுத்து அதில் புலம்பெயர் தமிழ் சமூகம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செயலில் இறங்கலாம். இதுதான் பொருத்தமான ஒரு பொறிமுறையாக இருக்கும்.

ஒவ்வொரு தேர்தலின் போதும் பந்தயக் குதிரைகளில் காசைக் கட்டுவது போல நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புக்களையும் முதலீடு செய்வதற்கு பதிலாக நீண்டகால நோக்கில் தமிழ் அரசியலைப் பண்படுத்துவதை நோக்கி புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம் சிந்திக்க வேண்டும்.அதற்குத் தேவையான கொழுத்த அனுபவமும் போதிய வளங்களும் அங்கு உண்டு. தாயகத்தில் செயற்படும் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் அதற்கு வேண்டிய நீண்டகால நோக்கிலான வழி வரைபடங்களை உருவாக்க வேண்டும். ஈழத் தமிழர்கள் தமது அடுத்த கட்ட அரசியலை உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைக்கும் விதத்தில் திட்டமிடுவது என்பது இதுதான். தாயகம்-தமிழகம்-தமிழ் டயஸ்போறா ஆகிய மூன்றையும் தாயகத்திலிருந்து ஒன்றிணைக்கும் ஒரு வழி வரைபடம்.

## சுமந்திரன் குட்டி இராணுவ ஆட்சியை நடத்துகிறார் என்கிறார் வேட்பாளர் சிவாஜிலிங்கம்




சுமந்திரன், குட்டி இராணுவ ஆட்சியை நடத்துவதாக வடமாகாண முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் குற்றம் சுமத்தியுள்ளார்.

திருகோணமலை, மூன்றாம் கட்டைப் பகுதியில் இன்று (வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் கூறுகையில், "சுமந்திரனைச் சூழ 20 விசேட அதிரடிப் படையினருடன் அமைச்சரவை அந்தஸ்துள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் உள்ளார்கள். இப்படியிருக்க இராணுவ ஆட்சி என்று சொல்லுமளவுக்கு இவரே செயற்படுகிறார். இந்நிலையில் இராணுவ ஆட்சியை தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பது நகைச்சுவையாக இருக்கின்றது" என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பு திருகோணமலை, மட்டக்களப்பு, வன்னி ஆகிய மாவட்டங்களில் பொதுக் கூட்டங்களை நடத்தியுள்ளபோதிலும் யாழ்ப்பாண தேர்தல் தொகுதியில் எவ்வித கூட்டங்களையும் நடத்த முடியாமல் பலவீனமாக இருப்பதாகவும் சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார்.

அத்துடன், மதுபானசாலைகளை நடத்துபவர்கள் வீட்டுச் சின்னத்திலேயே அதிகளவில் போட்டியிடுகின்றார்கள் என்றும் இவ்வாறானவர்கள் எவ்வாறு தமிழ் மக்களுக்கு சேவைசெய்யப் போகின்றார்கள் எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்நிலையில், இம்முறை தேர்தலில் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என சிவாஜிலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சர்வதேச நீதிகோரி காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வவுனியாவில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்!




சர்வதேச நீதியை கோரி காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வவுனியாவில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. வவனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக இன்று (வியாழக்கிழமை) காலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமது உறவுகளின் உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கு சர்வதேசம் தலையிடவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த ஆர்ப்பாட்டகாரர்கள், “எமது உறவுகளின் நிலையை வெளிப்படுத்துமாறு கோரி ஒவ்வொரு மாதமும் 30ஆம் திகதி போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். அரசியல்வாதிகள் எமது பிரச்சினைகளை தீர்த்துவைப்பதற்கு தவறியுள்ளனர். அந்த வகையில் சர்வதேச நீதியை கோரி நாம் போராடி வருகின்றோம்.

இன்று தமிழர்களிற்கு எதிராகவும் தமிழ்த் தேசியத்திற்கு எதிராகவும் பலர் பேசிக்கொண்டிருக்கின்றனர். தமிழ்த் தேசியத்திற்காக பாடுபடுகின்ற கட்சிகளில் ஒட்டுக்குழுக்களாக இருந்தவர்களும் பயணிக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் மாறி மாறி ஒருவரை ஒருவர் விமர்சித்து வருகின்றனர்.

தமிழ் மக்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பவர்களாக இருப்பவர்களையே நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.



இன்று வீடுவீடாக சென்று மக்களிடம் வாக்குகேட்கின்றார்கள். தமது பணிகளை சரியாக செய்திருந்தால் வீடுவீடாக செல்லவேண்டிய தேவை இல்லை. எனவே யாரை நாடாளுமன்றம் அனுப்பவேண்டும் என்று மக்களுக்கு நன்கு தெரியும். எனவே எமக்கான நீதிக்கான வலுவினைச்சேர்க்க வேண்டும் என்று மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்” என தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் “எங்கள் உறவுகளுக்கான நீதி சர்வதேச நீதியாகவே வழங்கப்படவேண்டும்”, “வட-கிழக்கில் தமிழருக்கெதிராக இராணுவத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை உடன் நிறுத்து” போன்ற வசனங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை கைகளில் ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பியிருந்தனர்

# நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாக் கடமையில் அதிகளவில் இராணுவத்தினர்



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவில் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ள பொலிஸாரில் மூன்றில் இரண்டு பகுதியினர் அடுத்தவாரம் மீளப் பெறப்பட்டு, இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது. எதிர்வரும் ஓகஸ்ட் 20ஆம் திகதி வைரவர் சாந்தி உற்சவத்துடன் திருவிழா நிறைவடையவுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் வீதித் தடைகள், அடியவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். அடுத்த வாரம் இடம்பெறவுள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் ஓகஸ்ட் 3ஆம் திகதி தொடக்கம் பொலிஸார் தேர்தல் கடமைக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

இதன் காரணமாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருவிழாவில் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ள பொலிஸாரில் மூன்றில் இரண்டு பகுதியினர் மீளப்பெறப்பட்டு இராணுவத்தினர் அதிகளவில் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் ஒரு வாரத்துக்கு இந்த நடைமுறை இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை வரலாற்றில் மூன்று குழந்தைகள் நேற்று பிரசவிப்பு



தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் நேற்று வியாழக்கிழமையன்று ஒரே சூலில் உருவான மூன்று குழந்தைகள் சத்திரசிகிச்சை மூலம் பிரசவிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பகுதியினைச் சேர்ந்த திருமதி சுகந்தன் என்ற ஆசிரியை ஒருவருக்கே இவ்வாறு மூன்று குழந்தைகள் கிடைக்கபெற்றுள்ளன. இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் இவ்வாறு ஒரே சூலில் கிடைக்கபெற்றுள்ளது.


பெண்ணியல் வைத்திய நிபுணர் என்.சரவணபவன் மற்றும் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் குழந்தை வைத்திய நிபுணர் எஸ்.ஜெயபாலன் ஆகியோரின் முயற்சியினால் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் இந்த குழந்தைகள் சத்திரசிகிச்சை மூலம் பிரசவிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக மூன்று அல்லது நான்கு குழந்தைகள் பெறுவதற்கு தயாராகும் தாய்மார்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு வைத்திய நிபுணர்களின் உதவியுடன் குழந்தைகள் பிரசவிக்கப்பட்டு வருகின்மை வழமையாக இருந்துள்ளது.



இந்நிலையில் வைத்திய நிபுணர் சரவணபவன் மற்றும் குழந்தை வைத்திய நிபுணர் ஜெயபாலன் ஆகியோரின் பங்களிப்புடன் சத்திரசிகிச்சை இன்று காலை மேற்கொள்ளப்பட்டு குழந்தைகள் பிரசவிக்கப்பட்டுள்ளன. தற்போது தாயும் குழந்தைகளும் நலமாக உள்ளதாக குறிப்பிடும் விடுதி வைத்தியர், அவர்கள் வெகுவிரைவில் வீடு திரும்புவார்கள் எனத் தெரிவித்தார்.

# அடுத்த 10 ஆண்டுகளும் கோட்டாபய தசாப்தமாகும் என்கிறார் விமல் வீரவன்ச



அடுத்த பத்தாண்டுகள் என்பது கோட்டாபய ராஜபக்ச தசாப்தமாகும். எனவே அவருடன் இணைந்து பணியாற்றக்கூடிய காலாவதியாகாத - பொருத்தமான உறுப்பினர்களை மக்கள் பாராளுமன்றம் அனுப்பவேண்டும். நுவரெலியா மாவட்டத்தில் நிமல் பியதிஸ்ஸ முதலிடம் பிடிப்பார். மாவட்டத்தையும் கைப்பற்றுவோம்.- என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல்வீரவன்ச தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது ஆகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான மொட்டு கூட்டணியே வெற்றிபெறும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. நுவரெலியாவில் காலநிலை மாறலாம். ஆனால் மொட்டை வெற்றி பெற வைக்கவேண்டும் என்ற மக்களின் மனநிலை மாறாது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது நாடுமீது பற்றுள்ள தலைவரை மக்கள் தெரிவுசெய்தனர். அவர்சிறந்ததேசியதலைவராகசெயற்பட்டுவருகின்றார்.அவர்ஜனாதிபதியானதால்தான்கொரோனாவைகூடஎமதுநாட்டில்கட்டுக்குள்கொண்டுவரமுடிந்தது.

பழைய ஜோடி இருந்திருந்தால் (ரணில் - மைத்திரிபால) இந்நேரம் நிலைமை மோசமாகியிருக்கும். எனவே எமக்கு கிடைத்துள்ள சிறந்த தலைவரின் கரங்களை பலப்படுத்தவேண்டும். அவருக்கு தேவையான விதத்தில்அரசாங்கமொன்றைஉருவாக்கவேண்டும்.

அடுத்த 10 ஆண்டுகள் கோட்டாபய தசாப்தமாகும். இந்த நாட்டை கட்டியெழுப்பும் தசாப்தமாகும். அனைத்து இன மக்களையும் அரவணைத்து புதியதொரு யுகத்தை உருவாக்கும் தசாப்தமாக அமையும். எனவே காலாவதியான அரசியல்வாதிகளை பாராளுமன்றம் அனுப்பாமல் சிறப்பாக செயற்படக்கூடியவர்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன். - என்றார்.



# அம்மா
## Amma Pawn Broker
## தங்க நகை அடைவு மாடம்

கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை



உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்

உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும் மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்

**105A - 2425 Eglinton Ave. E, Scarborough**
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள் உண்டு
Shankar& Co. வுக்கு அருகாமையில்

**1.5% முதல் 2.0% வட்டி மட்டுமே (per month)**

**416-757-0034**
**416-994-3861**

எவ்வளவு தொகையானாலும் மிகக் குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

நம்பிக்கை | நாணயம் | உத்தரவாதம்

# MONEY PROBLEMS?™

ஓர் சிறிய தொகையை மாதாந்தம் செலுத்துவதன் மூலம் உங்கள் கடனில் இருந்து விடுதலை பெறலாம்



## உங்களைக் கேளுங்கள்?

- நீங்கள் எப்பொழுதும் உங்கள் வங்கி தருகின்ற OVER DRAFT ஐ உபயோகிக்கின்றீர்களா?
- கடன் கொடுத்தவர்களால் உங்கள் வீட்டிற்கு அல்லது வேலைத்தளத்திற்கு தொலைபேசி அச்சுறுத்தல் அல்லது தொந்தரவு செய்வதுண்டா?
- வாடகை, மோட்கேஜ், வாகனங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதில் சிரமப்படுகின்றீர்களா?
- நிதிப்பிரச்சனை உங்கள் திருமணத்தையோ அல்லது உடல் நலத்தையோ பாதிக்கின்றதா?
- CREDIT RATING உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கின்றதா?
- உங்கள் கார், வீடு, RRSP, பங்குகள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்துவிடுவோம் என அஞ்சுகின்றீர்களா?
- உங்களுக்கு எதிராக நீதிமன்ற கட்டளைகள் உண்டா?
- உங்களுக்கு CRA உடன் தனிப்பட்ட வருமானவரிகள் அல்லது வேறு வரிகளினால் பிரச்சனைகள் உண்டா?

gta credit™

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கான உங்கள் பதில் "ஆம்" என்று இருந்தால் நீங்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தனிப்பட்ட பிரத்தியேக சந்திப்பொன்றை மேற்கொள்ள வேண்டும். உங்கள் சந்திப்பு எமது அலுவலகத்தில் உள்ள அரச அங்கீகாரம் பெற்ற ஆலோசகர் ஒருவரோடு இடம்பெறும்

**Scarborough / Downtown Toronto: 416-489-2000**
**Mississauga / Brampton: 416-650-5400**



| Scarborough | Toronto/Downtown | North York | Mississauga | Brampton |
|---|---|---|---|---|
| 201-4433 Sheppard Ave. E Scarborough, ON, M1S 1V3 | 800-120 Eglinton Ave. E Toronto, ON, M4P 1E2 | 306-1280 Finch Ave. W North York, ON, M3J 3K6 | 110-93 Dundas Street E. Mississauga, ON, L5A 1W7 | 201-7990 Kennedy Rd. South, Brampton, Ontario, L6W 0B3 |

**Mark Shamly**
*Tamil Consultant*

*Proudly Served over 15,000 clients since 2004*
**Visit : GtaCredit.Com**

**Ajay Oberoi**
*Experienced Credit Counsellor*



# இலங்கைத் தேர்தல் களம்: கொழும்பு மாவட்டம்

**சிவா பரமேஸ்வரன் ---- முன்னாள் மூத்த செய்தியாளர் பிபிசி**

இலங்கையிலுள்ள தேர்தல் மாவட்டங்களில் கூடுதலான உறுப்பினர்கள் தெரிவாகும் மாவட்டம் கொழும்பு. சிங்களவர்கள் கூடுதலாக வசிக்கும் இம்மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களும் கணிசமான அளவில் வாழ்கிறார்கள்.



இம்மாவட்டத்திலுள்ள 15 தொகுதிகளில் மகரகம, ஹோமாகம, கெஸ்பாவ, கடுவல ஆகிய தொகுதிகளில் அநேகமானோர் கடும்போக்கு பௌத்த சிங்களவர்கள்.

விகிதாசார முறையில் இதுவரை நடைபெற்ற ஏழு தேர்தல்களில், ரணில் விக்ரமசிங்க மறைந்த ஜே.ஆர். ஜெயவர்தன, ஆர். பிரேமதாஸ, லலித் அதுலத்முதலி, போன்ற முன்னணித் தலைவர்கள் கொழும்பிலிருந்துதான் தெரிவாகியுள்ளனர். கடும்போக்கு பௌத்தர்கள் என்று கூறப்படும் விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன, உதய கம்மன்பில, சம்பிக்க ரணவக்க, விஜேதாஸ ராஜபக்ச போன்றவர்களும் இங்கிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

1989 தேர்தல்: (ஆசனங்கள் 20)

இலங்கைத் தேர்தல் வரலாற்றில் முதல்முறையாகக் கொழும்பு மாவட்டத்திலிருந்து தமிழ் பிரதிநிதி ஒருவர் இந்தத் தேர்தலில் தெரிவானார். ஐ. தே. கட்சியின் யானைச் சின்னத்தில் இ. தொ. காவினால் முன்மொழியப்பட்ட எம்.எஸ். செல்லச்சாமி அந்தப் பெருமையைப் பெற்றார். ஐ. தே. கட்சிக்குக் கிடைத்த 12 ஆசனங்களில் எம். எச். மொஹமட், ஜாபிர். ஏ. காதர் ஆகிய முஸ்லிம்களும் தெரிவாகினர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 6 பேரும், மகாஜன எக்சத் பெரமுன சார்பில் இருவரும் தெரிவாகினர்.

1994 தேர்தல்: (ஆசனங்கள் 20)

சந்திரிகா அலை வீசிய இந்தத் தேர்தல் களத்தில் பொதுஜன முன்னணி என்கிற கூட்டணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையில் அறிமுகமானது. அந்த முன்னணியில் 11 பேர் தெரிவாகினர். ஏற்கனவே கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்ரமசிங்க முதல்முறையாக ஐ.தே.க சார்பில் கொழும்பு மாவட்டத்தில் தெரிவானார். ஐ.தே.கட்சிக்கு 9 ஆசனங்கள் கிடைத்தன. இருகட்சிகளில் தலா ஒரு முஸ்லிம் தெரிவானாலும் தமிழர்கள் யாரும் தெரிவாகவில்லை.

ஆகஸ்ட் மாதம் தேர்தல் நடைபெற்றது. அக்டோபரில் கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஐ. தே. க உறுப்பினர்களான ஓஸி அபேகுணசேகர, வீரசிங்க மல்லிமாரச்சி ஆகியோர் கொல்லப்பட்டனர். அந்த வெற்றிடத்துக்கு இ. தொ.காவைச் சேர்ந்த பி. பி. தேவராஜ் மற்றும் ஆர். யோகராஜன் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

2000ஆம் ஆண்டு தேர்தல்: (ஆசனங்கள் 20)




ஐ.தே. கட்சியுடன் மனோ கணேசனின் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸும் இணைந்தது. அவர்களுக்கு 10 ஆசனங்கள் கிடைத்தாலும் தமிழர்கள் யாரும் தெரிவாகவில்லை, எனினும் இரு முஸ்லிம்கள் தெரிவாகினர். பொதுஜன முன்னணி சார்பில் பௌசி உட்பட எட்டு பேர் வெற்றியீட்டினர்.

ஜே. வி. பி சார்பில் விமல் வீரவன்ச உட்பட இருவர் வெற்றி. இ. தொ. கா, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் காங்கிரஸ் ஆகியன தனித்துப் போட்டியிட்டாலும் படுதோல்வியடைந்தன.

2001 தேர்தல்: (ஆசனங்கள் 21)

ஐ. தே. க கூட்டணிக்கு மீளத் திரும்பியது இ. தொ. கா. முஸ்லிம் காங்கிரஸ், மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளும் பங்காளிகளாகின. அவர்களுக்கு 12 ஆசனங்கள் கிடைத்தன. மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், முதல்முறையாக நாடாளுமன்றம் சென்றார். பொதுஜன முன்னணிக்கு ஏழும், ஜே. வி. பிக்கு இரண்டு இடங்களும் கிடைத்தன. நான்கு தமிழக் கட்சிகள் இணைந்து முதல் தடவையாக த.வி.கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்டாலும் ஒரு ஆசனத்தையும் பெற முடியவில்லை.

2004 தேர்தல்: (ஆசனங்கள் 20)

ஐ. தே. க மற்றும் ஏனைய சிறுபான்மை கட்சிகள் இணைந்த கூட்டு தொடர்ந்து ஒன்பது பேர் தெரிவானார்கள். வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளின் பின்புலத்தில் த. தே. கூ போட்டியிட்டதன் காரணமாக, தி.மகேஸ்வரன் யாழ்ப்பாணத்தில் போட்டியிட முடியாமல் கொழும்பில் போட்டியிட்டுத் தெரிவானார்.



தேர்தல் பிரச்சார காலத்தில் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளான அவர் வைத்தியசாலையிலிருந்தே வெற்றி பெற்றார். கொழும்பு மாவட்டத்தில் தெரிவான முதல் இலங்கைத் தமிழர் என்ற பெருமையை அவருக்குரியது. மனோ கணேசன் மீண்டும் தெரிவானார். இரு முஸ்லிம் பிரதிநிதித்துவமும் தொடர்ந்தது.

பொதுஜன முன்னணி, மஹிந்த ராஜபக்ச தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக உருமாறியது. ஜே. வி. பி, மஹாஜன எக்சத் பெரமுன ஆகிய கட்சிகளை உள்ளடக்கிய இந்த முன்னணிக்கு எட்டு இடங்கள் கிடைத்தன. முதல்முறையாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட பௌத்த பிக்குமார்களை உள்ளடக்கிய ஜாதிக ஹெல உறுமயவுக்கு மூன்று இடங்கள் கிடைத்தன.

2008 ஜனவரி 1 பொன்னம்பலவானேஸ்வரர் ஆலய வளாகத்தில் தி.மகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது வெற்றிடத்துக்கு மு. காவை சேர்ந்த எம்.ரஜாப்தீன் நாடாளுமன்றம் சென்றார்.

2010 தேர்தல்: (ஆசனங்கள் 19)

ஐ. ம. சு. முன்னணியில் இ. தொ. கா மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவை இணைந்தது. இவர்களுக்கு 10 இடங்கள் கிடைத்த போதிலும் தமிழர்கள் எவரும் இல்லை. ஆனால் முஸ்லிம் ஒருவர் தெரிவானார். மேலக மக்கள் முன்னணி - மு. கா உட்பட ஐ. தே. க கூட்டு தொடர்ந்தது. மனோ கணேசன் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவ அவருக்குப் பதிலாக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட அவரது சகோதரர் பிரபா கணேசன் வெற்றிபெற்றார். அவர் பின்னர் மஹிந்தவுடன் இணைந்து கொண்டார். ஐ. தே. க கூட்டணிக்கு 7 இடங்கள் கிடைத்தன. முதல்முறையாக யானைச் சின்னத்தில் முஸ்லிம்கள் யாரும் தெரிவாகாத தேர்தல் இது. ஜனநாயகத் தேசிய முன்னணி சார்பில் ஜே. வி. பியைச் சேர்ந்த அனுரகுமார திஸநாயக்கவும், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சரத் பொன்சேகாவும் தெரிவாகினர்.

2015 தேர்தல்: (ஆசனங்கள் 19)

ரணில் - மைத்திரி நல்லாட்சி காலத்தில் நடைபெற்ற இந்தத் தேர்தலில் ஐ. தே. க கூட்டணியில் எஸ். எம். மரிக்கர், முஜிபுர் ரஹ்மான் ஆகிய புதுமுகங்களுடன் மனோ கணேசன் உட்பட 11 பேர் வெற்றி பெற்றனர். ஐ.ம.சு.மு சார்பில் 7 பேர் தெரிவான போதிலும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் எவரும் இல்லை. ஜே. வி. பிக்கு ஒரு ஆசனம் கிடைத்தது.

2020 தேர்தல்: (ஆசனங்கள் 19)

கடந்த தேர்தல்களில் இருமுனைப் போட்டி நிலவிய இங்கு இதர பகுதிகளைப் போலவே இங்கும் மும்முனைப் போட்டி நிலவுகிறது.




ஐக்கிய தேசியக் கட்சி (யானை):

கடந்த முறை தெரிவான 11 பேரில் ரணில் விக்ரமசிங்க, ரவி கருணாநாயக்க ஆகிய இருவர் மட்டுமே மீண்டும் இக்கட்சி சார்பில் போட்டியிடுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் போனமுறை வெற்றிபெற்ற தயா கமகே இப்போது கொழும்பில் போட்டியிடுகிறார். எஞ்சிய 9 பேரில் எட்டு பேர் இம்முறை தொலைபேசி சின்னத்திலும், விஜேதாஸ ராஜபக்ச தாமரை மொட்டுச் சின்னத்திலும் வாக்கு கோருகின்றனர். முன்னாள் மாகாண சபை சண் குகவரதன் உட்பட இரு தமிழர்களுக்கும் இரு முஸ்லிம்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி (தொலைபேசி):



கடந்த தேர்தல்களில் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து தெரிவான சஜித் பிரேமதாஸ முதல் தடவையாகக் கொழும்பு மாவட்டத்தில் களமிறங்கியுள்ளார்.

சென்ற தேர்தலில் ஐ. தே. க சார்பில் தெரிவாகியிருந்த மனோ கணேசன், முஜிபுர் ரஹ்மான், எஸ். எம். மரிக்கர் உட்பட 7 பேர் இடமளிக்கப்பட்டுள்ளது. இவர்களுடன் ஐ.மு.சு. முன்னணியின் தேசியப் பட்டியலில் தெரிவாகியிருந்த பௌசியும் நேரடிப் போட்டியில் இறங்கியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன (தாமரை மொட்டு):

தமிழ் பேசும் மக்கள் கணிசமாக வாழும் இம்மாவட்டத்தில் அவர்கள் முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளது வேட்பாளர்கள் பட்டியலைப் பார்க்கும் போது தெரிகிறது.



2015ல் தெரிவாகியிருந்த விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன, உதய கம்மன்பில, போன்றவர்களுக்கு இம்முறையும் இடமளிக்கப்பட்டுள்ளது.

கள நிலவரம்:

ஐந்தாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற தேர்தலில், ஐ. தே. க-11, ஐ. ம. சு. மு-07, ஜே. வி. பி-01 என ஆசனங்கள் பிரிந்தன. வழமைக்கு மாறாக இம்முறை மும்முனைப் போட்டி நிலவுவதால்,

அது தாமரை மொட்டுக்குச் சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளது. யானையும் - தொலைபேசியும் ஒருவர் மீது ஒருவர் சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதை, தாமரை மொட்டு மௌனமாக ரசித்துக் கொண்டிருக்கிறது. சிறுபான்மை மக்களின் வாக்குகளைவிடச் சிங்கள வாக்குகளை அதிகமாகக் கவரும் நோக்குடன் தனது பிரச்சார உத்தியைக் கையாள்கிறது தாமரை மொட்டு. ரணில்-சஜித் இடையேயான மோதல் யானைச் சின்னத்தின் வாக்கு வங்கியை பரவலாகப் பாதிக்கக் கூடும்.



2015 தேர்தலில் யானைக்கு 53% வாக்குகளும், ஐ. ம. சு. முன்னணிக்கு 39% வாக்குகளும் கிடைத்தன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்சவுக்கு 53% வாக்குகள் உயர சஜித்துக்கு 47%மாக வாக்குகள் குறைந்தன. ஜனாதிபதித் தேர்தல் வாக்கு வீதத்தைப் பார்க்கும் போது, சஜித்துக்கு கிடைத்த வாக்குகள் இரண்டாகப் பிரிவதும் அதனால் ஆசனங்கள் குறைவதும் தவிர்க்க முடியாதது.

இச்சூழலில் தாமரை மொட்டு-08, தொலைபேசி-05, யானை-03, ஜே. வி. பி-01 எனும் வகையில் ஆசனங்கள் பிரியக் கூடும். ஒரிரு ஆசனங்கள் கடைசி நேர உச்சகட்டப் பிரச்சாரத்தை பொறுத்தே அமையும். சிறுபான்மை இனத்தவர்களின் பிரதிநிதித்துவத்தை கடந்த தேர்தல்களில் யானைதான் பெற்றுத்தந்தது. இம்முறை அது யானையால் முடியாது. தாமரை மொட்டுச் சின்னத்தில் சிறுபான்மையினரே இல்லாத நிலையில் அதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. எனவே சிறுபான்மையினருக்கான வாய்ப்பு தொலைபேசியில்தான் தெரிகின்றது.

தொலைபேசியில் மூன்று முஸ்லிம்களும், மூன்று தமிழர்களுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஐந்து-ஆறு ஆசனங்களில் கடந்தமுறை போன்று சிறுபான்மையினருக்கு மூன்று இடங்கள் கிடைக்குமா என்பது கேள்விக்குறியே.




தமிழ் மக்கள் எதிர்ப்பார்க்கின்ற மனோ கணேசன் கடந்த தேர்தலில் சொற்ப வாக்குகள் வித்தியாசத்திலேயே தெரிவாகியிருந்தார். அவரால் அரசியலுக்குக் கொண்டுவரப்பட்ட சண் குகவரதன் யானையில் இணைந்து போட்டியிடுகிறார். அவர் சொற்ப வாக்குகளைப் பெற்றாலும் அதுவும் மனோவுக்கு பாதகமாக அமையக்கூடும்.

கடந்த தேர்தலில் மனோ கணேசனைவிடக் கூடுதல் வாக்குகளைப் பெற்றிருந்த சுஜீவ சேனசிங்க, ஹர்ஷ டி சில்வா, சம்பிக்க ரணவக்க, மரிக்கார், முஜிபுர் ரஹ்மான், ஹிருணிகா பிரேமச்சந்திர ஆகிய 6 பேருடன் இம்முறை சஜித்தும் களத்திலுள்ளார்.

எனவே மனோ கணேசன் குறைந்தது 75,000 வாக்குகளையாவது பெற வேண்டியதுள்ளது. அவரது வெற்றி தமிழ் மக்கள் தமது வாக்குகளைச் சிந்தாமல் சிதறாமல் அளிப்பதிலேயே உள்ளது.

# இலங்கையின் ஆதிக் குடிகள் யார்? மகாவம்சம் என்ன சொல்கிறது?

**– பாகம் 6 –**



### சப்புமால் குமாரய

கோட்டை இராசதானி காலத்தில் யாழ்ப்பாணம் நல்லூர் ஆலயம் சப்புமால் குமாரய என்ற சிங்கள இளவரசரினால் கட்டப்பட்டது என்பதற்காக வரலாற்றுப் புகழ்மிக்க ஆலயங்களை உரிமை கோரமாட்டோம் என எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளர். இதற்கு முன்னர் திருக்கோணேஸ்வர ஆலயம் கோகண்ண விகாரையின் மீதே கட்டப்பட்டுள்ளது எனவும் அவர் பேசியிருக்கிறார். இவர் தொல்பொருள் மரபுரிமைகளை பாதுகாக்கும் சனாதிபதி செயலணியின் உறுப்பினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு இறுதியில் நடந்த சனாதிபதி தேர்தலில் கோட்டாபய இராசபக்ச 6,924,255 (52.25 விழுக்காடு) இலட்சம் வாக்குகளைப் பெற்று பெரும் வெற்றியீட்டி இருந்தார். தமிழர், முஸ்லிம்கள் வாக்குகள் இன்றி முழுக்க முழுக்க சிங்கள - பவுத்த வாக்காளர்களின் ஆதரவிலேயே தான் வெற்றி பெற்றதாக போட்டாபய பெருமைப் பட்டுக்கொண்டார். அவர் பெருமைப் பட்டதில் பொருள் உண்டு. சனாதிபதி தேர்தலின் வெற்றி தோல்வியை சிறுபான்மை மக்களே தீர்மானிக்கிறார்கள் என்ற நம்பிக்கையை கோட்டாபய தகர்த்துவிட்டார். வெற்றி பெற்ற பின்னர் சிங்கள மன்னர்களின் பழைய தலை நகரமான அனுராதபுரத்தில் அவர் பேசும் போது தான் ஒரு சிங்கள - பவுத்த பாரம்பரியத்தில் பிறந்து வளர்ந்தவன் என்று சொன்னார். மேலும் "ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் வரலாற்றைக் கொண்ட சிங்கள கலாச்சாரத்தையும் பாரம்பரியத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும். நமது பாரம்பரிய தார்மீக விழுமியங்கள், மரபுகள், சடங்குகள் மற்றும் ஒற்றுமையைப் பாதுகாக்க ஆதரவு வழங்கப்படும்" என்றார்.

கோட்டாபய உருகுண பிரதேசத்தை ஆண்ட மன்னன், காகவண்ண தீசனது தந்தை, துட்ட கைமுனு இன் பாட்டன். கடந்த சனாதிபதி தேர்தல் பரப்புரையின் போது "ஸ்ரீசங்கபோ மன்னன் கொலை செய்யப்பட்ட பின்னர் கோட்டாபய மன்னரானதை சஜித் அறிந்திருக்க மாட்டார்" என மகிந்த இராசபக்ச பேசியிருந்தார். இராசபக்ச குடும்பம் மன்னர் பரம்பரைக் குடும்பம் என மகிந்த இராசபக்ச சொல்லாமல் சொல்லியிருந்தார்.

சனாதிபதி கோட்டாபய இராசபக்சவின் வெற்றிக்குப் பிறகு சிங்கள - பவுத்த தேசியவாதிகள் மத்தியில் பேர் எழுச்சி ஏற்பட்டுள்ளது. கிழக்கில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை அடையாளம் காணவும் அவற்றைப் பாதுகாக்கவும் ஓய்வு பெற்ற இராணுவ தளபது கமல் குணரத்தின தலைமையில் ஒரு செயலணி நியமிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

எல்லாவெல மேதானந்த பேரர் போலவே "வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஓர் அடி நிலம்கூட தமிழர்களுக்கோ அல்லது முஸ்லிம்களுக்கோ சொந்தம் இல்லை. இந்தநிலையில், வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களின் சொந்தப் பூமி என்ற நினைப்பில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கருத்துக்களை வெளியிடுவதை உடன் நிறுத்த வேண்டும்" என பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் பிரகடனம் செய்திருப்பதும் மனம் கொள்ளத்தக்கது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் சப்புமால் குமார என்ற இளவரசரினால் கட்டப்பட்டது என்பது சரி. ஆனால் அவன் சிங்கள இளவரசன் என்பது பிழை. அவனது இயற்பெயர் செண்பகப்பெருமாள் என்பதே சரி.

15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அரசு வலிமை பெற்று விளங்கியது. பாக்கு நீரிணைப் பகுதியில் கடல் ஆதிக்கமும், மன்னர்ப் பகுதியில் முத்துக்குளிப்பு உரிமையும் பெற்றிருந்த யாழ்ப்பாண அரசுக்குக் குறிப்பிடத்தக்க வருவாய் கிடைத்தது. தெற்கே புத்தளம் வரை யாழ்ப்பாண அரசின் ஆதிக்கம் இருந்தது. இக்காலத்தில், யாழ்ப்பாண அரசு தென்னிலங்கை அரசுகளின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய நிலையிலும் இருந்தது. தென்னிந்தியாவில் விசயநகர ஆதிக்கம் ஏற்பட்டபோது, பாக்கு நீரிணையில் அவர்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. இதனால், யாழ்ப்பாண அரசின் வருமானம் வீழ்ச்சியுற்றதுடன், விசயநகரப் பேரரசுக்குத் திறை செலுத்த வேண்டிய நிலைமையும் உருவானது. இந்தப் பொருளாதார வீழ்ச்சி யாழ்ப்பாண அரசின் வலிமையைப் பெருமளவுக்குக் குறைத்துவிட்டது. இதே காலப்பகுதியில் வலிமை குன்றியிருந்த தென்னிலங்கை கோட்டை அரசு, ஆறாலம் பாராக்கிரமபாகுவின் ஆட்சியின் கீழ் வலிமை பெறலாயிற்று.

சப்புமால் குமாரய என அழைக்கப்பட்ட செண்பகப்பெருமாள் ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனாவான் என்பது முதலியார், செ. இராசநாயகம் அவர்கள் கருத்தாகும். இவனைப்பற்றி முதலியார் அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

"கோட்டை அரசனாகிய ஆறாம் பராக்கிரமபாகு சபைக்கு மலையாளத்தேசத்திலிருந்து பணிக்கன் ஒருவன் வந்தான். அவனை அரசன் உபசரித்து, அவன் தேகவலியாலும் வாட்போர்த்திறத்திலும் ஈடுபட்டவனாய்த், தன் குலத்தினளாகிய ஒரு கன்னிகையை அவனுக்கு மணம் முடிப்பித்தான். இப் பணிக்கனுக்குச் செண்பகப்பெருமாள் (சப்புமால் குமாரய), ஜெயவீரன் (அம்புலகலகுமாரய) எனவிரு குமாரர்கள் பிறந்தார்கள். பராக்கிரமபாகு தனக்குப் புத்திரர்கள் இல்லாமையால் இவர்களைத் தனது சொந்தப் புத்திரர்களாக வைத்து வளர்த்து வந்தான். இ∴திங்ஙனமாக, பராக்கிரமபாகுவின் மகள் உலகுடையதேவி நன்னூர்த் துணையார் மூ என்பவனை மணந்து ஜெயவீரன் என்னும் மகனையீன்றாள். இந்நிகழ்ச்சி பராக்கிரமபாகுவின் எண்ணங்களை மாற்றிவிட்டது.

தான் இறந்தபின் தத்த புத்திரர்களில் ஒருவன் இராச்சியத்துக்குவரின் தன் பேரப்பிள்ளைக்கு அரச பதவி இல்லாது போய்விடும் என்ற அச்சத்தால் பராக்கிரமபாகு அவ்விரு குமாரர்களையும் அகற்ற வேண்டுமென எண்ணி, வன்னியர்களை யடக்கி, யாழ்ப்பாண அரசனையும் வென்று வருமாறு செண்பகப்பெருமாளை அனுப்பினான்.

இவர்கள் உயிருடன் திரும்ப மாட்டார்கள் என்று பராக்கிரமபாகு கருதினான். செண்பகப்பெருமாள் பிரபலம் பெற்ற குதிரை வீரன். உருவத்தால் இராட்சதனைப்போலும் காத்திரமுடையவன் மகா பலங்கொண்டவன். தகுந்த படையுடன் வந்த இவன் கறுப்புக்குதிரை மீதமர்ந்து, எதிரி படையுட் புகுந்து அநேகரைத் தன் வாளுக்கிரையாக்கி, தமிழ்ச் சேனையைப் புறங்கொடுத்தோடச் செய்தான். போர்க்குடைந்த கனகசூரியன் (கிபி 1440 வரையில் அரசனானான்) தன் குடும்பத்தாருடன் இந்தியாவுக்கோடித் திருக்கோவலூரிற் கரந்துறைவானாயினான்.

"செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணத் தலைநகருட் புகுந்து, மாடமாளிகைகளைத் தரைமட்டமாக்கி, அநேக அதிகாரிகளைச் சிறைப்படுத்தி அவர்களுடன் அனுப்பினான்.

பராக்கிரமபாகுவின் கபட சிந்தையை யறியாத செண்பகப்பெருமாள் யாழ்ப்பாணம் போய்ப் பழைய தலைநகர் பாழாய்விட்டமையினால், நல்லூரிலே கிபி 1450 ஆம் ஆண்டளவில் ஒரு புது நகர் எடுப்பித்துச் சிறீசங்கபோதி புவனேகவாகு என்னும் சிங்கள நாமத்தோடு பதினேழு வருடங்களாக (கிபி 1467 வரை) அரச செய்து வந்தான்.

இவன் யாழ்ப்பாணத்தை வென்ற புகழ் சிங்கள நாடெங்கும் பரவிப் பேரானந்தத்தை விளைத்தது. இவ் வெற்றியைப் புகழ்ந்து "கோகிலசந்தேஸ" என்னும் குயில்விடு தூதுப் பிரபந்தம் தேவி நுவரையைச் சேர்ந்த இருகல் கலத்திலக்க பரிவேனாதிபதி எனும் பௌத்த குருவினால் இயற்றப்பட்டது."

செண்பகப்பெருமாள் ஆண்ட நகர் விசாலித்த தெருக்களும், உப்பரிகை பொருந்திய வீடுகளும், மாளிகைகளும், இராமன் கோயில் முதலிய கோயில்களும் இருந்ததாக கைலாயமாலை என்ற நூல் கூறுகின்றது. இந்த நூலை முத்துராச கவிராயர் என்ற புலவர் பாடியுள்ளார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டியவன் புவனேகவாகு என்பது "கைலாயமாலை" யில் வந்துள்ள பின்வரும் தனிச் செய்யுளால் அறியக்கிடக்கின்றது:

" இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபதா மாண்ட தெல்லை
அலர்பொலி மாலை மார்ப னும்புவனேக வாகு
நலமிகும் யாழ்ப்பா ணத்துநகரிகட் டுவித்து நல்லைக்
குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித் தானே."

இப் புவனேகவாகு திரிசங்கபோதி என்ற அரியணைப் பெயராலும் அழைக்கப்பட்டான் என்பது ஸ்ரீமான் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் எழுதிய "யாழ்ப்பாணச் சரித்திரத்தில், விசுவநாத சாஸ்திரியார் சம்பவக் குறிப்பு எனும் கையெழுத்துக் பிரதியிலிருந்த எடுத்துக் காட்டிய செய்யுளால் நன்கு புலப்படுகின்றது. அச் செய்யுள் வருமாறு :

"இலகிய சகாத்த மெண்ணூற் றெழுபத்து நான்கி
னலர்திரி சங்க போதி யாம்புவ னேக வாகு
நலமுறும் யாழ்ப்பாணத்து நகரி கட்டுவித்து
குலவியகந்தனார்க்குக் கோயிலொன்றமைப்பித்தானே."

நல்லூர் கட்டியம்
இவன் நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் கட்டியத்தில் இன்றும்

"சிறீமான் மஹாராஜாதிராஜ
அகண்ட பூமண்டலப்ர
தியதிகந்தர விச்றந்த கீர்த்தி
சிறீ கஜவல்லி மாவல்லி சமேத சுப்பிரமண்ய
பாதாரவிந்த ஜநாதிரூட சோடச
மகாதான சூர்யகுல வம்சோத்பவ சிறீசங்க
போதி புவனேகவாகு"

என்று போற்றப்படுகிறான்.

மாவிட்டபுரக் கொயிலாதீனப் பிராமணர் சின்னமனத்துளார் என்பவர் இவ்வரசனுக்கு விருந்தளித்ததாகவும் அவ்விருந்தைப் புகழ்ந்து சில பாக்கள் பாடியதாகவும் "யாழ்ப்பாண வைபவமாலை" குறிப்பிடுகின்றது. அப்பாடல்களுள் ஒன்று பின்வருமாறு:

"சின்ன மனத்தான் செயும்விருந்திற் சாற்றுருசி
அன்னதனை விண்ணோர் அறிந்திருந்தால் □ முன்னலைவாய்
வெற்பதனைக் காவியுய்த்து வேலைகடைந் தேயுலைதல்
அற்பமெனத் தள்ளுவரே யாம்."

இந்தச் செய்யுளை நோக்குமிடத்து செண்பகப் பெருமாள் சிறந்த தமிழ்ப் புலவனாக விளங்கினான் என்பது தேற்றம்.

யாழ்ப்பாணத்து இராசதானியாகிய நல்லூரைச் செண்பகப் பெருமாள் நன்கு திருத்தி, நல்லைக் கந்தவேள் ஆலயத்தையம் ஆக்குவித்தான். "செண்பகப்பெருமாள் தமிழ்க்குருதி தன் நாளங்களில் ஓடக் கொண்டவனாதலாலும், தமிழுற்பத்தியாளனேயாகிய அளகேஸ்வரன் காலந்தொட்டு ஜெயவர்த்தன கோட்டையிலேயும் வழிபாடு பயின்று வந்தமையாலும், கோகில சந்தேசமுடையார் அவனைப் புத்தமத தாபகனெனப் புகழ்ந்தோதியவிடத்தும் தமிழ்ப் பிரசைகட்கிதமாய்த் தமிழ்த் தெய்வ வழிபாடுகளையே யாழ்ப்பாணத்தில் வளர்த்திருப்பான் என்பதிற் சிறிதும் சந்தேகமின்று" எனச் சுவாமி ஞானப்பிரகாசர் தாம் எழுதிய "யாழ்ப்பாண வைபவ விமர்சன" த்திற் (பக்.107) கூறியிருத்தலும் ஈண்டு நினைவுகூர்தற்பாலது.

ஆறாம் புவனேகபாகு

கி.பி.1467 இல் கோட்டையை ஆண்ட ஆறாம் பராக்கிரமபாகு தன் பேரன் ஜெயவீரனுக்கு இலங்கையரசை யீந்து முடிசூட்டிச் சிலநாளில் இறந்தான். இதைக் கேகள்வியுற்ற செண்பகப் பெருமாள் யாழ்ப்பாணத்திலிருந்த புறப்பட்டுக் கோட்டைக்குச் சென்ற ஆங்கு அரசானக இருந்த சிறுவனைக் கொண்று ஆறாம் புவனேகவாகு எனும் அரியணைப் பெயருடன் கோட்டை யரசனானான்.

யாழ்ப்பாணத்தில் விஜயபாகு என்னும் சிங்களனொருவன் அரசனாகப் புவனேகவாகுவால் நியமிக்கப்பட்டான். இவன் ஆட்சிக்காலத்தில் கனகசூரியன் தன் புத்திரர்களுடனும் சேனைகளுடனும் யாழ்ப்பாணம் மீண்டும் வந்து, விஜயபாகுவுடன் போர் தொடுத்து அவனைக் கொன்று மீண்டும் தானே வட இலங்கை அரசனாகி நல்லூரில் இருந்து அரசாண்டான். (வளரும்)

***- கனடா நக்கீரன்***


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9


Amma Brand
இப்பொழுது கனடாவிலும்
கிடைக்கின்றது!


Amma
Apple Cider
with Mother Vinegar
LOOSE WEIGHT
HELPS IN :
WEIGHT MANAGEMENT
GLOWING SKIN
GOOD FOR HEART
BLOOD PRESSURE
URIC ACID
100% Natural
NOW IN CANADA
Apple Cider
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471


Premium Quality
Amma
Gingelly Oil
(Contains Permitted Anti-Oxidants)
சுத்தமான நல்லெண்ணெய்
NOW IN CANADA
Import and Deliver
AMMA FOOD INC. 647-832-5471
750ml
375ml


Amma Herbal
Juices
NOW IN CANADA
Jamun with Karela Juice
Aloe Vera Juice
Karela Juice
Amla Juice
Super Energizer
Neem Leaf with Aloe Vera Juice
Body Pain Relax Juice
Aloe Noni with Aloevera Juice
100% NATURAL
Import and Deliver
AMMA FOOD INC.
647-832-5471

# அண்ணிக்கான வேண்டுகோள்.

சசிகலா மிகவும் நேர்மையான எளிமையான கூர்மையான ஆளுமை நிறைந்த புத்திசாலி ஆவர். பதவிக்காகவோ அந்தஸ்துக்காகவோ அரசியலில் நுழையவில்லை. அவர் எனது அண்ணா காட்டிய வழியில் மக்களுக்கு சேவையாற்றவே அரசியலுக்கு வந்துள்ளார். அண்ணாவின் அகால மறைவுக்குப்பின் தனது பிள்ளைகளை ஆளாக்க வேண்டும் என்று தனி குடும்பத் தலைவியாக பிள்ளைகளை சட்டத்துறையிலும் மருத்துவத்துறையிலும் கற்க விட்டு, பல சவால்களுக்கு மத்தியில் வளர்த்து ஆளாக்கி விட்டார். யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட பட்டதாரியான இவர் ஆசிரியப் பணியை கொழும்பில் பிரபல்யமான தனியார் பாடசாலையில் (Bishop's College) பௌதீகவியல் (Physics) ஆசிரியராக இவ்வாண்டு வரை ஏறத்தாழ 30 வருடங்களுக்கு மேல் கடமையாற்றி, பெண்பிள்ளைகளின் வழிகாட்டியாக திகழ்ந்தவர். இன்று எல்லாப் பொறுப்புகளையும் சரிவர செய்து அண்ணாவின் அபிலாசைகளை நிறைவேற்ற தனது விருப்பத்துடன் அவர் காட்டிய வழியை பின்பற்றி அரசியலில் இறங்கவுள்ளார். சசி அண்ணி அதிகம் தேவையில்லாமல் கதைக்க மாட்டார். கதைத்தால் முக்கிய விடயங்களே பெரும்பாலும் இருக்கும். அவர் அண்ணாவுடன் இணைந்து ஒப்பேற்றி வைத்த திருமணங்கள் ஏராளம். அவர்களின் கொழும்பு இல்லம் எத்தனையோ உறவினர்கள் நண்பர்கள் தங்கிச் செல்லும் இடமாகும். இன்று வெளிநாடுகளில் இருக்கும் பல உறவுக்காரர்கள் இவரின் வீட்டில் இருந்தே சென்றுள்ளார்கள். அண்ணா தான் தேர்ந்தெடுத்த வாழ்க்கை துணைவி. அவர் தனக்கு பொருத்தமானவரையே தேர்ந்து எடுத்திருக்க வேண்டும். எனவே அவர் பாதை வழி சென்று வாழ்க்கையில் அரசியல் பாடத்தை அனுபவித்து உணர்ந்தவர். பல இன்னல்களையும் எதிர் நீச்சல் கொண்டவர் என்ற ரீதியில் எளிமையான அவரை அரசியல் பிரதிநிதியாக தெரிவு செய்து வாக்களிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.





புலம் பெயர் மக்களே எனது அண்ணா விட்டுச்சென்ற பாதையை பின் தொடர்ந்து செல்ல சசிகலா ரவிராஜ் அவருக்கு ஆதரவு வழங்குமாறு உங்கள் உறவுகளுக்கு வேண்டுகோள் விடுங்கள்.

**நடராஜா ரவிராஜின் அன்புத் தங்கை,**
**வாசுகி தேவதாஸ்**
**சட்டத்தரணி**






# மேலதிகமான உள்ளூர் சமூக வணிகங்களும் சேவைகளும் மீண்டும் திறக்கப்படுவதனாலும், சமூகமாக ஒன்றுகூடும் நபர்களின் தொகை 10 ஆக அதிகரிப்பதனாலும், நாம் அனைவரும் ஒருவரையொருவர் பாதுகாக்கும் எமது முயற்சிகளைக் கண்டிப்பாகத் தொடர வேண்டும்.





**உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிக்கவும்**, இரண்டு மீட்டர் இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும்



உடல் ரீதியான இடைவெளியைக் கடைப்பிடிப்பது ஒரு சவாலாக இருக்கும்போது, **முகக்கவசம் ஒன்றினை அணிந்து கொள்ளவும்.**



**தொடர்ச்சியாக அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளவும்**



உங்களுக்கு COVID-19 இருப்பதாக அல்லது அந்த வைரஸ் தாக்கத்துக்கு நீங்கள் முகம் கொடுத்திருப்பதாக எண்ணினால், **சோதனைக்கு உட்படவும்.**

**வீட்டிலும் வெளியிலும் பாதுகாப்பாக இருந்து கொள்ளவும். உயிர்களைப் பாதுகாக்கவும்.**

ontario.ca/coronavirus ஐப் பார்வையிடவும்.
ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# SKN FINANCIAL

www.sknfinancial.com



அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

**கனடாவில் மிகக் குறைந்த வட்டி வீதத்தில் தங்க அடைவு செய்யக் கூடிய ஒரே அடைவு மாடம்**

- $ அவசரப் பணத் தேவையா? புதிய வியாபாரம் தொடங்கப் பணம் தேவையா?
- $ புதிய மஸைன வாங்குவதில் பணச்சிக்கலா?
- $ உங்கள் மாதாந்த வட்டியை வங்கியில் கட்டும் வசதியும் உண்டு
- $ உங்கள் அடைவுகளை இலகுவாக மீட்பதற்குப் பலவிதமான திட்டங்கள் உள்ளன
- $ வட்டித் தொகைக்கு வரிவிலக்கு பற்றுச் சீட்டு வழங்கபடும்

முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டது

உங்கள் நகைகளுக்குப் பாதுகாப்பு!..
குறைந்த வட்டி!..[2% முதல்]
நிறைந்த பெறுமதி!...
www.sknfinancial.com

**SCARBOROUGH**
801 Markham Road
(Painted Post Plaza)
Markham & Ellesmere
647-729-5238

**BRAMPTON**
85 Kennedy Road South, Unit 33
( Next to TIM HORTONS )
Kennedy & Steeles
905-499-0800

# பெரிய சிவன் ஆலய நிர்வாகம்

## உலக சைவத் திருச்சபையிடம் கையளிப்பு

## ஆகஸ்ட் 1ம் திகதி சனிக்கிழமை 2020 முதல்

**ஆலய நிர்வாகத்தினையும் சகல பெறுப்புக்களையும் உலக சைவத் திருச்சபையிடம் கையளிக்கின்றேன் என்பதை சைவ மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்!**

உலக சைவத் திருச்சபையின் கனடா தலைவரும் கனடா சைவ சமயத் தலைவருமான

அதிவணக்கத்துக்குரிய சாமி அப்பாத்துரை அவர்கள்!

பொதுச் செயலாளராக மதிப்புக்குரிய பேராசிரியர் இ பாலசுந்தரம் அவர்கள்!

பொருளாளராக கு. மங்களேஸ்வரன் அவர்கள்

இவர்களின் வழிகாட்டலில் மற்றும் பல நிர்வாக உறுப்பினர்களுடன் கோவில் நிர்வாகம் நடைபெறும்.

**சைவ மக்கள் அனைவரும் சிவாலய வளர்ச்சிக்கு ஒத்துழைத்து பெரிய சிவன் ஆலயத்தையும் சைவ திருச்சபையினையும் வளர்த்தெடுத்து உலக சைவ மக்களுக்கும் இங்குள்ள சைவ மக்களுக்கும் பணிபல ஆற்ற ஒத்துழைக்கும் வண்ணம் அன்போடு வேண்டிக் கொள்கின்றேன்.**

**உலக சைவத் திருச்சபையில் இணைந்து கொள்ள ஆர்வமுள்ள அனைவரும் அன்போடு வரவேற்கப்படுகின்றீர்கள்.**

**27 ஆண்டுகள் கனடாவில் என்னால் முடிந்தவரை சைவப் பணி ஆற்றியுள்ளேன்!**

**சைவத் திருப்பணிக்காக இறுதிக் காலம் சைவத் தொண்டுக்காகத் தாயகம் செல்கிறேன். அங்கும் தமிழகத்திலும் சைவப்பணி ஆற்றுவதற்காக எம்பெருமான் கிருபையால் செல்கிறேன்!**

சிவனின் அடியார்களுக்கு அடியவனான, சைவ நெறித் தொண்டனாக வாழும்

கலாநிதி அடியார் விபுலானந்தா

தானமும் தவமுடையார்க்கே!

தானம் தலைகாக்கும் தலைமுறைகளையும் காக்கும்!

சிவ திருப்பணி செய்வோர்க்கு அவர்கள் செய்யும் தானத்தின் அளவு 1000 மடங்காக அவர்களுக்கு புண்ணிய பலனோடு அவர்களுக்கே கிடைக்கும்! சொத்தும் மூன்று தலைமுறைக்கு வயளரும்!

சிவாலயம் கட்டுவதற்கு சிவாலய திருப்பணி செய்வதற்கு சைவ நெறியை வளர்ப்பதற்கு கொடுக்கின்ற கொடைக்கு நிகரான கொடை இந்த உலகில் வேறு எதுவுமே இல்லை!

**தமிழர்களை வாழ வைத்தது சிவ வழிபாடும் சைவ நெறியுமே!**

இனிமேலும் தமிழினத்தை வாழவைக்கப்போவதும் சிவ வழிபாடும் சைவநெறியுமே!

சைவ மக்கள் அனைவரும் இணைந்து சிவாலயத்தை வளர்த்தெடுத்து அடுத்த நமது சந்ததிகள் வாழ வழி அமைப்போமாக!

**தமிழினத்தை மீண்டும் வாழ வைக்கப்போவது சிவ வழிபாடும் சைவநெறியுமே!**

## வட அமெரிக்காவிலே புனித திருத்தலமாக வளரும்

# பெரிய சிவன் ஆலயம்

## கேட்கும் வரங்களைக் கொடுத்துக் கொண்டிருப்பவளாம் உண்ணாமுலை அம்பிகையின் ஆலயம்

"சைவத் தமிழர்களே தன்மானம் காப்பவர்கள்"

"சைவத் தமிழர்களால் மட்டுமே தமிழினத்தை முன்னேற்ற முடியும்"

**பெரிய சிவன் ஆலயம்**

1148 பெலாமிவீதி (near Progress) ஸ்காபரோ ( 2 minutes from 401 HWY )

(416) 769-7747, (416) 907-7434



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
416-332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 906



## மயூரபதி பத்திரகாளி அம்பாள் ஆலயம்
### - கொழும்பு -

உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான மக்கள் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டதோடு, பல இலட்சம் மக்கள் தமது இன்னுயிர்களை நீத்த நிலையில் அஞ்சி அஞ்சி வாழும் நிலை காணப்படுகின்றது. செய்வதறியாது அரசுகள் மக்களைக் காப்பாற்ற பல்வேறு வழிகளைக் கையாள்கின்றன. கனடாவில் வதியும் மக்கள் அரசின் வழிகாட்டல்களை ஏற்று பெருமளவு பாதிப்புக்களிலிருந்து தப்பி வாழ்கின்றனர். கனடிய அரசிற்கு அனைவரும் தலைவணங்குவோம். இதேவேளை ரொறன்ரோவில் வாழும் மக்கள் ஒன்ராரியோ தலைமையும், ரொரன்ரோவின் தலைமையும் காட்டும் வழியில் பயணித்து, பேரிழப்புக்களை தவிர்த்து வாழ்கின்றனர். வழிகாட்டிகயாகிய இவர்களுக்கும் நன்றி கூறுவதோடு தொடர்ந்தும் அன்றாடம் இவர்களால் வழங்கப்படும் நெறிமுறைகளையும் ஏற்று வாழ்வது அனைவரும் நலமே வாழ உதவும்.

உயிர்கொல்லி நோயாய் உலகெங்கும் பரவியுள்ள கொரோனா வைரசிலிருந்து தப்பி உயிர்வாழக் கையாள வேண்டியவை:

1. சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல்
2. முகக் கவசம் அணிதல்
3. கைகளை அடிக்கடி கழுவுதல்
4. தேவையற்று வெளியே செல்வதைத் தவிர்த்தல்
5. அரசின் ஆணையை ஏற்று வீட்டில் இருத்தல்

இந்த ஐந்து நெறிமுறைகளுமே உயிர்களைப் பலிகொள்ளும் கொரோனா என்ற கொடிய வைரசை ஒழிக்க உதவும் நடைமுறைகளாகும். இந்த ஐந்து நடைமுறைகளையும் அனைவரும் பின்பற்றி நலமுடன் வாழ்வோம்.

நாமும் நலம்பெற்று, உலகமக்களும் நலமே வாழ, ஆத்மசுத்தியோடு இறைவனைப் பிரார்த்திப்போம். சிவவழிபாட்டிலே நோய் பிணி மற்றும் மரணத்தை வெல்லும் மந்திரமாக மகா ம்ருத்தும்ஜெய மந்திரம் கூறப்பட்டுள்ளது. இறைவனை வழிபடும்பொழுது தினமும் இந்த மந்திரத்தை ஒரு முறையோ அன்றி பலமுறையோ காலை, மாலை வேளைகளில் கூறி, இந்த உலகத்தைப் பீடித்துள்ள நோய் பிணி நீங்கி அனைவரும் நலம்பெற்று வாழ வேண்டும் என்ற வேண்டுதலை முன்வைத்து, இறைவனை வழிபடவேண்டும். நிச்சயம் பலன் கிடைக்கும்.

**மகா ம்ருத்தும்ஜெய மந்திரம்**

ஓம் த்ரியம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருஹமிவ பந்தனாத்
ம்ருத்யோர் முஷ்ய மாம்ருதாத்''

ஓம் நமச்சிவாய ஓம்நமச்சிவாய ஓம்நமச்சிவாய.

இம்மந்திரத்தை தினமும் ஓதுவதோடுநாமும் நலமடைந்து உலகமக்களும் நலமடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். இவ்வாறான பிரார்த்தனைகளால் பலனும் நலமும் பெற்றவர்கள் பலர்.

அநீதியை அழிக்கத்தோன்றிய வடிவமே பத்ரகாளி வடிவம் என அழைக்கப்படுகின்றது. அன்னைவடிவமான மகாசக்தியின் பல்வேறு வடிவங்களில் ஒன்றாகக் காளி வடிவம் கருதப்படுகின்றது. சக்தி வழிபாடு பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாயினும், பததிரகாளித்தெய்வத்தின் வழிபாடு ஈழத்திலும், இலங்கையிலும் புகழ்பெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. காளியின் தோற்ற வரலாற்றைப் புராணங்கள் பல்வேறு விதமாக எடுத்துரைக்கின்றன.

சும்பன், நிசும்பன் என்ற அரக்கர்கள் நான்முகனை நோக்கி வரமிருந்து, பெண்களைத் தவிர வேறு யாராலும் தங்களுக்கு இறப்பு நேரக்கூடாது என்ற வரத்தைப்பெற்றனர். இவ்வரத்தை ஆயுதமாகக் கொண்டு அனைவரையும் துன்புறுத்தி வந்தனர். இவர்களின் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் அன்னை பராசக்தியிடம் தமது குறையைக் கூறிக் காப்பாற்றி அருளுமாறு வேண்டினர். தேவர்களின் நிலை கண்டு இரங்கிய தேவி தன் உடலினின்றும் ஒரு சக்தியைத் தோற்றுவித்தாள். அச்சக்தி கருமை நிறத்தோடு பார்க்க அஞ்சும் கோலத்தில் காணப்பட்டமையால் பத்திரகாளி என்று அழைக்கப்பட்டாள். இத்தோற்றத்தில் சும்பன், நிசும்பன் ஆகிய அசுரர்களை அழித்து அருள்பாலித்தாள் என ஸ்ரீதேவி பாகவதம் கூறுகின்றது.

எனினும் சினம் தணியாமல் காணப்பட்ட காளிதேவியின் சினத்தை அடக்கத் திருவுளம் கொண்ட சிவபெருமான், காளி தங்கியிருந்த ஆலங்காடு வந்து, காளியுடன் ஆடற்போட்டியில் ஈடுபட்டார். ஆட்டவேகத்தில் வலச் செவியிலிருந்து விழுந்த காதணியை ஆட்டத்தை நிறுத்தாமலே சிவபிரான் வலக்காலால் தூக்கித் தன் செவியில் அணிந்து கொண்டதாகவும், வலக்காலை வானோக்கி உயர்த்தி ஆடற்குறிப்புக் காட்டமுடியாத நிலையில் காளி தோல்வியுற்றுச் சினம் அடங்கியதாகவும் மற்றொரு புராணவரலாறு கூறுகின்றது. இந்தத் தாண்டவ கோலத்தை ஊர்த்துவ தாண்டவம் என்றும் சண்டதாண்டவம் என்றும் புராணங்கள் குறிப்பிட்டுள்ளன. கந்தப்பபுராணம், மார்க்கண்டேயபுராணம், சிலப்பதிகாரம் போன்ற பலவற்றில் காளியின் தோற்றத்திற்கான காரணங்கள் விளக்கப்பட்டுள்ளன. காளி வழிபாடு தமிழகத்திலே மிகப் பிரபல்யம் பெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. சங்ககாலத்திலே பாலைநிலத்தின் தெய்வமாக மக்கள் காளியை வழிபட்டுள்ளனர். இடைக்காலத் தமிழ்ப் புலவர்கள் இமயக்கிழவி என்றும், கடும்போர் கடந்தகுமரி என்றும் காளியைக் குறிப்பிட்டுள்ளனர். தமிழக மன்னர்கள் காளியைக் குலதெய்வமாக வழிபட்டுள்ளனர். சோழ அரசனான விசயாலயன், தஞ்சையில் காளிக்குத் தனிக்கோயில் எழுப்பி, குலதெய்வமாகப் போற்றி வணங்கியுள்ளான்.

*வளரும்...*



*- மொன்றியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்*

# #6 சிவாஜியும் தமிழ்ச் சினிமாவும்

"நம் தமிழ் மக்களை தவிர வேறு யாருமே சிவாஜிகணேசனை "எங்கள் இனத்தவர்", என்று உரிமை கொண்டாட முடியாது. தன் இனத்தவர் என்று அந்தரங்கமான சலுகைகள் வழங்குவதற்கும் சிவாஜிகணேசனுக்கு நம் தமிழர்களை தவிர வேறு யாருமே கிடையாது. தமிழன் சிவாஜி முழுக்க முழுக்க நம் தமிழர்களுக்கே உரியவர். இன்று கலையுலகில் நம் தமிழகத்தின் பெருமையை காத்து நிற்பவர்", என்று சிவாஜிகணேசனை தமிழர்களின் சொத்து என்றே சொந்தங் கொண்டாடினார் மறைந்த எழுத்தாளரும் "கல்கண்டு" இதழின் ஆசிரியருமான தமிழ்வாணன் அவர்கள்.



"துணிவே துணை" என்று எதையும் ஆணித்தரமாக எழுதியவரும் எடுத்துரைத்தவருமாகிய அமரர் ஆகிவிட்ட பத்திரிக்கையாசிரியர் தமிழ்வாணன் என்பது அவரை படித்தவர்களுக்குப் புரியும். இப்படி எத்தனையோ பெரியவர்களாலும் ரசிகர்களினாலும் பத்திரிகையுலக நண்பர்களாலும் ஏன் அவருடன் சில விடயங்களுள் ஒத்துப்போகாத எதிர் முகாம்களில் உள்ளவர்கள் கூட சிவாஜியின் நடிப்பாற்றலுக்கும் தொழில் பக்திக்கும் பாராட்டும் மதிப்பும் தந்து வணங்கியே நிற்பார்கள். அதற்கு காரணம் என்ன?

நடிகர் திலகமே அதற்கு விளக்கம் தருகிறார்.

"நடிப்பை நான் நேசிக்கிறேன். நடிப்பு என்னை ஆக்கிரமித்து விட்டது. மக்களை கலையால் காந்தமென இழுப்பதே என் லட்சியம்!" சென்னை தொலைக்காட்சி வெள்ளி விழா நினைவு பேட்டியில் இவ்விதம் பதில் கூறினார்.

அதோடு மட்டுமல்ல கல்யாணமாகாத காளையர்களைக் கூட அவர் கண்கள் காந்தமென இழுத்தன. ஒரு நடிகனுக்கு பல லட்சணங்கள் உண்டு அதிலும் அந்த நடிகன் உடைய விழி அமைப்பும் விழிகளில் இருந்து வீசும் ஒளியும் அதிமுக்கியம்.

என்னைப் பொறுத்தளவில் நடிகர் திலகம் அவர்களுக்கு படைப்புக் கடவுள் பிரம்மன் விஷேட கவனம் செலுத்தி விழிகளை படைத்திருக்கிறார் என்றே எண்ணத் தோன்றுகிறது. பல வரிகளைப் படித்து வசனம் பேச வேண்டிய காட்சிகளில் ஒரு பார்வையால் பேசிவிடுவார். அது மாத்திரமல்ல பெண்கள் இடத்தில் உள்ள நளினம் நாணம் மிகுந்த அதி அற்புதமான கண்கள் அவருடையது.

காலஞ்சென்ற நடிகர் ஜெமினி கணேசன் அவர்கள் ஜெமினி இலாகாவில் (அமரர் எஸ் எஸ் வாசன் அவர்களுடன்) பணியாற்றும் போது நடிகர் திலகம் பற்றி எழுதிய குறிப்பில் பேசும் கண்கள் உடைய இந்த நடிகர் எதிர்காலத்தில் திரையுலகில் மிகச் சிறப்பான இடத்தை வகிப்பார் என குறிப்பிட்டிருந்தாராம்!.



அந்தக் கண்கள் தான் அவருக்கு நாடக மேடையில் முதன்முதலாக சீதை பாத்திரத்தை ஏற்று நடிப்பதற்கு ஒரு துணையாகவும் அதிக பொருத்தம் மிகுந்ததாகவும் இருந்தது போலும்!

ஆம், அவருடைய முதல் வேடம் பெண் வேடமே ஆகும். சீதாவேடம் யாவரும் தொழுதேத்தும் ராமாயண தாயான சீதை பாத்திரம். ராமாயண நாடகத்தில் வரும் பெரும்பாலான பாத்திரங்கள் அனைத்து வேடங்களிலும் நடித்த பெருமை சிவாஜி கணேசனுக்கு உண்டு.

சூர்ப்பனகை, பரதன், இந்திரஜித், இலக்குவன், விசுவாமித்திரர், ஜனகர், விபீஷணன், இராவணன், கும்பகர்ணன், ராமன், அனுமன், என்று ராமாயண நாடகத்தில் அனைத்து பாத்திரங்களும் வசனங்களை மனப்பாடம் செய்து எந்த நேரத்திலும் எந்த வேடம் ஆனாலும் சரி பிய்த்து உதறி விடுவார் சிவாஜி அவர்கள்.!

நாடக மேடையில் முதன்முதல் பெண் வேடமிட்டு வெற்றுடம்புடன் நடித்தவரும் இவர்தான்! இவர் ஏற்றுக் கொண்ட பெண் பாத்திரங்களில் யாவரையும் கவர்ந்தது "நூர்ஜஹான்" வேடமாகும்.

தம்பி சிவாஜி அவர்களை அனார்கலியாகவும், நூர்ஜஹான் ஆகவும், பார்த்து மெய்மறந்த அறிஞர் அண்ணா அவர்கள்..." தலுக்கள்.. குலுக்கல்.. மினுக்கள்.. விழிவீச்சு.. ஒய்யார நடை நாணி கோணி நிற்பது போன்ற இந்தப் பெண்மையின் சாயல்கள் எப்படிப்பா கற்றாய் என வியந்து பாராட்டினாராம். அதனால்தான் நாடகத்திலும் சினிமாவிலும் பெண் நடிகைகள் பலர் நடிக்க வந்த பின்னரும் பிரபல நாடகக் கம்பெனிகள் அனைத்தும் கணேசன் அவர்களை பெண் வேடமிட வைத்தன என்றால் மிகையில்லை.

சிவாஜி அவர்கள் உயிருடன் வாழ்ந்த காலத்தி, 90களின் பிற்பகுதியில் கொழும்பு நகரில் பிரம்மாண்டமான பாராட்டு விழா ஒன்று ஏற்பாடாகியிருந்தது. விழாவை முன்னெடுத்தவர் சிங்கள சினிமாவின் மூத்த கலைஞரான காமினி பொன்சேகாவும் ஏனைய கலைஞர்களும் ஆவர்கள். விழாவின் போது நடந்த பத்திரிக்கையாளர்கள் மத்தியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும்போது "... பெண்களைவிட ஆண்களுக்கே நளினம் அதிகம்" பெண் வேடமிட்ட நடிகர்கள் தான் பின்னாளில் அதிகம் புகழ் பெற்றனர் என்று கூறினார் சிவாஜி அவர்கள்.

இதை மெய்ப்பித்து காட்டியவர் சிவாஜி அவர்கள். அவருக்கு மேலும் புகழைத் தேடித்தந்த "மனோகரா" திரைப்படம் ஆவதற்கு முன் நாடகத்தில் நளினமும், சாகசமும் மிக்க வசந்தசேனை யாகவும், கற்புறுதியும் கம்பீரம் மிக்க ராணி பத்மாவதி ஆகவும் நடித்துப் பிரமிக்க வைத்தவர் நமது கணேசன் அவர்கள் என்பது இப்போதுள்ள தலைமுறையினர் அறியாத சங்கதி ஆகும்.

*(தொடர்ச்சி 20ம் பக்கம்)*



SCARBOROUGH ASTROLOGER & PSYCHIC
OM SHAKTI ASTROLOGER & PSYCHIC
Master: KALI
9 TIMES MORE POWERFUL THAN OTHER ASTROLOGERS
REMOVES BLACK MAGIC, JADOO, VODOO, OBEYA, BUTTU, JINN & GIVES N100% PROTECTION



VEDIC SOLUTIONS AVAILABLE FOR:
* Health * Education * Family * Job
* Marriage * Divorce * Love * Childless
* Business * Promotion * Husband-Wife Couples
* Lucky Numbers * Court Etc

REMOVES BLACK MAGIC & EVIL SPIRITS & GIVES 100% PROTECTION

No Person in the World is Without Problems. Meet the Pandit once and see your Future Changing for GOLDEN & BRIGHT FUTURE

100% Guarantee
He can perform Devi upasana Lakshmi Pooja Shanthi Pooja (Prayers) and all so protection from enemies and jealousy
PRIVATE & CONFIDENTIAL

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பண்டித் Pandit: Gabbar Vishnu சாஸ்திரிகள் பல இடங்களுக்குச் சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, ஜாதகம், முக நாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்கவிருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றையெல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒருமுறை இவரைச் சந்தியுங்கள்..!

கண்ணூறு, நாவூறுக்கு வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக நூல் கட்டப்படும்

- கைரேகை
- நாம சட்சத்திரம்
- கல்வி, உத்தியோகம்
- தொழில், வியாபாரம்
- இலட்சுமி வசீகரம்
- வதிவிடப் பிரச்சனைகள்
- வெளிநாட்டுப் பயணங்கள்
- பெண்பிள்ளைகள் - பெற்றார் பிரச்சனைகள்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- குழந்தைப் பாக்கியம்
- சர்ப்ப தோஷம்
- கர்ப்பதோஷம்
- கஸ்ட - நஸ்டங்கள்
- வாகனப் பொருத்தம்
- ஒன்று கூடுதல்

100% Guarantee
Private & Confedential

2697 Eglinton Ave E, Scarborough ON
Next to CIBC Bank (BRIMLEY & EGLINTON)
437-217-3345

# PRECONSTRUCTION CONDOS & TOWNHOUSES!






**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award | 100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9



# Canada VISA

கூடிய விரைவில் உங்கள் கைகளில்

## இலங்கையிலுள்ள உங்கள் உறவினர்கள் CANADAவிற்கு அழைத்து வர எம்மை நாடுங்கள்

**STUDENT VISA**
ஏற்பாடுகளை இலகுவான முறையில் விரைவில் செய்து தருபவர்கள்.

**TOURIST VISA**
தனியாகவோ, குடும்பத்தினருடனோ உல்லாசமாக வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

**VISIT VISA**
பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

**REFUSED VISA**
உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**BUSINESS VISA**
உங்கள் வர்த்தகத்தினை மேலும் பெருக்கும் நோக்கத்துடன் கனடா வருவதற்கான ஏற்பாடுகளை செய்து தருபவர்கள்.

**10 வருட கால நம்பிக்கையான சேவை**



P. Jegan
Director - Flex Institute
+94 777 761 346

flex Institute
Step Towards a Bright Future

6A, Parakumba Place, Colombo 06, Sri Lanka.
www.flexinstitute.lk Flex Institute
flexinstitute04@gmail.com
Hotline: +94 777-761 346



P. Vijay
Director - Flex Institute
+94 777 555 026

# ரபேல் போர் விமானங்கள் இந்தியா வந்தன: அம்பாலா விமானப்படை தளத்தில் உற்சாக வரவேற்பு



இந்திய விமானப்படையின் வலிமையை பெருக்கும் வகையில் 36 ரபேல் போர் விமானங்களை பிரான்ஸ் நாட்டிடம் இருந்து வாங்குவதற்கு இந்தியா முடிவு செய்தது. இதற்காக பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கூட்டணி அரசு கடந்த 2016ம் ஆண்டு, செப்டம்பர் மாதம் 23ந் தேதி, ரூ.59 ஆயிரம் கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தை பிரான்ஸ் நாட்டின் டசால்ட் நிறுவனத்துடன் செய்து கொண்டது.

ஆனால் ரபேல் போர் விமானங்கள் வாங்க மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் ஊழல் நடைபெற்றிருப்பதாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை சுமத்தின. குறிப்பாக ரபேல் போர் விமானங்களுக்கு விலை நிர்ணயம் செய்ததிலும், டசால்ட் நிறுவனத்துடன் இணைந்து செயல்பட அரசுத்துறை நிறுவனமான இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் நிறுவனத்தை விட்டு விட்டு அனில் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்தை தேர்வு செய்ததிலும் ஊழல் நடந்ததாக எதிர்க்கட்சிகள் கூறின.

ஆனால் இது தொடர்பாக தொடரப்பட்ட வழக்குகள், சுப்ரீம் கோர்ட்டில் 2018ம் ஆண்டு டிசம்பர் 14ந் தேதி தள்ளுபடி செய்யப்பட்டன. இந்த தீர்ப்பை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு மனுக்களும், கடந்த ஆண்டு நவம்பர் 14ந் தேதி தள்ளுபடி செய்யப்பட்டன.

இதற்கு மத்தியில், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் ராணுவ மந்திரி ராஜ்நாத் சிங், பிரான்ஸ் நாட்டுக்கு பயணம் சென்றிருந்தார்.

இதையொட்டி கடந்த திங்கட்கிழமை மத்திய அரசு வெளியிட்ட ஒரு அறிக்கையில், "10 ரபேல் போர் விமானங்கள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டன. அவற்றில் 5 விமானங்கள், பிரான்சில் பயிற்சிக்காக வைக்கப்பட்டிருக்கும். 5 விமானங்கள் இந்தியா வருகின்றன. 36 விமானங்களும் அடுத்த ஆண்டு இறுதிக்குள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டு விடும்" என கூறப்பட்டிருந்தது.

இதன்படி 5 ரபேல் விமானங்கள், பிரான்ஸ் நாட்டின் துறைமுக நகரமான போர்டியாக்ஸில் உள்ள மெரிக்னாக் விமான தளத்தில் இருந்து 27ந் தேதி புறப்பட்டன. 7 மணி நேரம் பறந்த நிலையில் அந்த விமானங்கள் வரும்வழியில் ஐக்கிய அரபு அமீரகத்தில் அல்தாப்ரா விமான தளத்தில் தரை இறங்கி பின்னர் பயணத்தை தொடர்ந்தன.

30 ஆயிரம் அடி உயரத்தில் அவை பறந்தபோது, நடுவானில் பிரான்ஸ் டேங்கர் விமானத்தில் இருந்து எரிபொருள் நிரப்பிக்கொண்டன.

7 ஆயிரம் கி.மீ. தொலைவுக்கு பறந்து வந்த அந்த விமானங்கள் நேற்று பிற்பகல் 3.10 மணிக்கு, இந்திய மண்ணை வெற்றிகரமாக தொடுகிற வகையில் அம்பாலா விமானப்படை தளத்தில் வந்து தரை இறங்கின. அந்த விமானங்களுக்கு மரபுப்படி தண்ணீரை பீய்ச்சியடித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. முன்னதாக அவை இந்திய வான் எல்லைக்குள் நுழைந்தபோது, அவற்றை இரண்டு சுகோய் 30 எம்.கே.ஐ. விமானங்கள் வரவேற்று பின்தொடர்ந்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய விமானப்படை சரித்திரத்தில் நேற்றைய நாள் ஒரு மகத்தான நாளாக பதிவானது.

5 ரபேல் போர் விமானங்கள் இந்தியா வந்து சேர்ந்ததை பிரதமர் நரேந்திர மோடி உற்சாகமாக வரவேற்றுள்ளார். இதையொட்டி அவர் சமஸ்கிருத மொழியில் டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்டார். அம்பாலா விமானப்படை தளத்தில் ரபேல் போர் விமானங்கள் வந்து தரை இறங்கிய சிறிய அளவிலான காட்சி தொகுப்பு வீடியோவையும் அவர் இணைத்து இருந்தார்.

அவர் வெளியிட்டிருந்த பதிவில், "நாட்டை பாதுகாப்பதை விட சிறந்த சபதம் எதுவும் இல்லை" என குறிப்பிட்டிருந்தார். இதையொட்டி டுவிட்டரில் உருவாக்கப்பட்ட 'ரபேல் இன் இந்தியா' என்ற பெயரிலான 'ஹேஷ்டேக்' சமூக ஊடக ஆர்வலர்களிடம் பெருத்த வரவேற்பை பெற்றது. ரபேல் போர் விமானங்கள் இந்தியா வந்து சேர்ந்ததற்கு ராணுவ மந்திரி ராஜ்நாத் சிங் மகிழ்ச்சி தெரிவித்தார். இதையொட்டி அவர் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில் "அம்பாலாவில் பறவைகள் (ரபேல் போர் விமானங்கள்) பத்திரமாக வந்து தரை இறங்கின" என குறிப்பிட்டார்.

மேலும், "இந்திய விமானப்படையின் புதிய திறனைப்பற்றி யாராவது கவலைப்பட வேண்டுமானால், அவர்கள் எங்கள் பிராந்திய ஒருமைப்பாட்டை அச்சுறுத்த விரும்புவோராகத்தான் இருப்பார்கள்" என குறிப்பிட்டார். சமீப காலமாக எல்லையில் இந்தியாவிடம் வாலாட்டி வருகிற சீனாவுக்கு விடப்பட்ட மறைமுக செய்தியாக இது அமைந்துள்ளதாக சர்வதேச நோக்கர்கள் கருதுகின்றனர்.

ராஜ்நாத் சிங், ரபேல் போர் விமானங்கள் பற்றி மேலும் கூறுகையில், "இந்தியாவில் ரபேல் போர் விமானங்கள் வந்திறங்கி இருப்பது ராணுவ வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தை குறிக்கிறது. இந்த விமானங்கள் இந்திய விமானப்படையின் திறன்களில் புரட்சியை ஏற்படுத்தும்" எனவும் குறிப்பிட்டார்.

இந்தியா வந்து சேர்ந்துள்ள ரபேல் போர் விமானங்கள் இந்திய விமானப்படையின் அங்கம் ஆகி விட்டன.

இருந்தபோதிலும், அவற்றை முறைப்படி இந்திய விமானப்படையில் சேர்ப்பதற்கான விழா, ஆகஸ்டு மாத மத்தியில் நடைபெறும்; இதில் ராணுவ மந்திரி ராஜ்நாத் சிங், பாதுகாப்பு படை உயர் அதிகாரிகள் கலந்து கொள்வார்கள் என்று தகவல்கள் கூறுகின்றன.

## தமிழகத்தில் ஆகஸ்ட் 31ஆம் தேதி வரை ஊரடங்கு நீட்டிப்பு; அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் முழு ஊரடங்கு : முதல்வர் பழனிசாமி



தமிழகத்தில் ஆகஸ்ட் 31ஆம் தேதி வரை ஊரடங்கு நீட்டிப்பு; ஆகஸ்ட் மாத அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளிலும் தளர்வுகள் இல்லாத முழு ஊரடங்கு என முதல்அமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக கடந்த மார்ச் மாதம் 25ந் தேதி முதல் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. மேலும் தற்போது பல்வேறு தளர்வுகளுடன் இதுவரை 5 முறை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டு உள்ளது. தமிழகத்தில் சென்னையில் தான் முதலில் கொரோனா பாதிப்பு அதிகரித்து வந்தது தற்போது பிற மாவட்டங்களில் கட்டுக்குள் இருந்த கொரோனா மீண்டும் வீரியம் பெற தொடங்கி உள்ளது. இந்நிலையில் தமிழகத்தில் நாளையுடன் ஊரடங்கு நிறைவடையும் நிலையிலும் கொரோனா நிலவரம் குறித்தும் மருத்துவ நிபுணர் குழுவுடன் முதலமைச்சர் பழனிசாமி இன்று ஆலோசனை நடத்தினார்.

ஆலோசனை கூட்டத்தில் பேசிய முதல் அமைச்சர் அரசின் விரைவான நடவடிக்கைகளால் சென்னையில் பாதிப்பு குறைந்துள்ளது. இதுவரை 14 லட்சம் பேர் காய்ச்சல் முகாம்களால் பயன் அடைந்துள்ளனர். இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் கொரோனா இறப்பு விகிதம் குறைவாக உள்ளது. அனைவருக்கும் தமிழக அரசின் மூலம் இலவச முக கவசம் வழங்கப்படுகிறது. அதிக பரிசோதனை கூடங்கள் உள்ள மாநிலம் தமிழகம் தான்.இந்தியாவிலேயே 25,36,660 பரிசோதனைகள் தமிழகத்தில் செய்யப்பட்டுள்ளன என கூறினார். மருத்துவ நிபுணர் குழுவுடன் ஆலோசனை நடத்திய பின் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தமிழகத்தில் ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்பட்டு உள்ளது என அறிவித்து உள்ளார். ஆகஸ்ட் மாத அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளிலும் தளர்வுகள் இல்லாத முழு ஊரடங்கு ரெயில், விமானப் போக்குவரத்தில் தற்போதைய நிலை தொடரும், இபாஸ் நடைமுறையும் தொடரும் காய்கறி, மளிகை கடைகள் காலை 6 முதல் இரவு 7 மணி வரை இயங்க அனுமதி. ஆகஸ்ட் 15ம் தேதி மத்திய அரசின் வழிகாட்டுதல்படி சுதந்திர தினம் கொண்டாடப்படும்.

பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகளில் வழிபாட்டுத் தலங்களை திறக்க அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது.

# 7 பேர் விடுதலை எப்போது? கவர்னர் தரப்பு விளக்கம் அளித்துள்ளதாக ஐகோர்ட்டில் தமிழக அரசு தகவல்



7 பேர் விடுதலை தொடர்பாக கவர்னர் தரப்பில் விளக்கம் அளிக்கப் பட்டுள் ளதாக தமிழக அரசு தரப்பில் சென்னை ஐகோர்ட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று கடந்த 28 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருப்பவர் பேரறிவாளன். இவரது தாயார் அற்புதம்மாள், சென்னை ஐகோர்ட்டில் ஆட்கொணர்வு மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அதில், "புழல் சிறையில் என்னுடைய மகன் அடைப்பட்டுள்ளான். சிறையில் ஏற்கனவே 50 கைதிகள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்வேறு உடல் உபாதைகளால் பாதிக்கப்பட்டு அவதிப்பட்டு வரும் பேறிவாளன், இந்த நோயால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. அதனால் அவருக்கு 90 நாட்கள் 'பரோல்' வழங்க தமிழக அரசுக்கு உத்தரவிட வேண்டும்' என்று கூறியிருந்தார். இந்த மனு நீதிபதிகள் என்.கிருபாகரன், வி.எம்.வேலுமணி ஆகியோர் முன்பு 22ம் தேதி விசாரணைக்கு வந்தது.

அப்போது அரசு தரப்பில் ஆஜரான வக்கீல், "பேரறிவாளன் கடந்த 2019ம் ஆண்டு நவம்பர் மாதம் 90 நாட்கள் பரோலில் வெளியில் வந்துள்ளார். அதனால், சிறை விதிகளின்படி 2 ஆண்டுகளுக்கு பின்னர் தான் அவருக்கு மீண்டும் 'பரோல்' வழங்க முடியும்" என்றார். மனுதாரர் தரப்பில் ஆஜரான வக்கீல், "பேரறிவாளன் உள்பட 7 பேர் விடுதலை தொடர்பான தமிழக அரசின் தீர்மானம் கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக கவர்னரின் பரிசீலனையில் உள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில் 2 ஆண்டுகளுக்கு பின்னர்தான் பரோல் வழங்க வேண்டும் என்று அரசு காத்திருக்க தேவையில்லை என்று ஐகோர்ட்டு ஏற்கனவே தீர்ப்பு அளித்துள்ளது. எனவே, 90 நாட்கள் பரோல் வழங்க உத்தரவிட வேண்டும்" என்று வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், "அரசியல் அமைப்பு சட்டத்தின் கீழ் பதவி வகிப்பவர்கள் மீதுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் தான், அவர்கள் ஒரு முடிவை எடுக்க கால நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால், 2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம், 7 பேரையும் விடுதலை செய்வது குறித்து தமிழக அமைச்சரவை தீர்மானம் இயற்றியது. இந்த தீர்மானத்துக்கு கவர்னர் ஒப்புதல் அளிக்கவேண்டும். இல்லை திருப்பி அனுப்ப வேண்டும். ஆனால் 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் 7 பேர் விடுதலை தொடர்பான தீர்மானம் மீது எந்த முடிவு எடுக்கப்படவில்லை" என்று அதிருப்தி தெரிவித்தனர்.

பின்னர், "7 பேர் விடுதலை தொடர்பாகவும், பேறிவாளனுக்கு 'பரோல்' வழங்குவது தொடர்பாகவும் தமிழக அரசு ஒரு வாரத்துக்குள் பதில் அளிக்க வேண்டும்" என்று உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை 29 ந்தேதிக்கு தள்ளி வைத்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் அடுக்கடுக்கான கேள்விகளை முன்வைத்தனர். பரோல் குறித்து மனு அளித்து கிட்டத்தட்ட 4 மாதங்களாகிவிட்டது. ஏன் இன்னும் முடிவெடுக்கவில்லை. சம்பந்தப்பட்ட சிறைத்துறை அதிகாரிகளுக்கு அபராதம் விதிக்கலாமா? என்று நீதிபதிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

மேலும் தாங்கள் ஏற்கனவே குறிப்பிட்டது போல 7 பேர் விடுதலை தொடர்பாக அதிருப்தி தெரிவித்ததையும் சுட்டிக்காட்டினார்கள். அப்போது குறுக்கிட்ட அரசு தரப்பின் தலைமை குற்றவியல் வழக்கறிஞர் நடராஜன், நீதிமன்றம் அதிருப்தி தெரிவித்ததை கவர்னரிடம் தெரிவித்து, ஏன் இவ்வளவு காலதாமதம் என்று கேள்வி எழுப்பி அதற்கான கடிதம் அளித்துள்ளதாகவும், அதன் அடிப்படையில் கவர்னர் தரப்பில் இருந்து தமிழக அரசுக்கு கடிதம் வந்ததாகவும், அந்த கடிதத்தில் ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பாக ஜெயின் கமிஷனால் அமைக்கப்பட்ட பல்நோக்கு விசாரணை குழும ஆணையத்தினுடைய விசாரணை இன்னும் நிறைவடையாததால் அந்த அறிக்கைக்காக காத்திருப்பதாகவும் கவர்னர் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது என்று தமிழக அரசு தரப்பு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து பரோல் தொடர்பாக 3ம் தேதி பதிலளிக்க உத்தரவிட்டு வழக்கு விசாரணையை நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

# இவ்வார ராசிபலன்

**31-07-2020 வெள்ளி தொடக்கம் 06-08-2020 வியாழன் வரையும்**





**மேஷம்:** உபயோகமும் உன்னதமும் நிறைந்த நல்ல வாரம். வெகுதி
பெருகும். வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். உத்தியோகம் இடமாற்றம் ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. திடீர் செலவு ஏற்படும். வழிபடவேண்டிய தெய்வம்: சந்திரபகவான்
அதிர்ஷ்ட எண்: 6,3,2,1, அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**ரிஷபம்:** பூமியால் லாபமும் புத்திரயோகமும் கிடைக்கக்கூடிய வாரம். வியாபாரம் லாபம் தரும். உறவினர்களால் உதவி கிட்டும். உயர்கல்வி ஆர்வம் தேவைகள் அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். விமங்கள செய்தி வரும். மாணவர்கள் உற்சாகம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். நிதானம் நல்லது. வழிபடவேண்டிய தெய்வம்: வீரவி-நாயகர், அதிர்ஷ்ட எண்: 9,6,4,7
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,H




**மிதுனம்:** சந்தோஷமானநிகழ்வுகளும் சாதகமான சூழ்நிலைகளும் உள்ள யோகமான வாரம். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோ-ாதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. புண்ணியஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. வழிபடவேண்டிய தெய்வம்: பாதள பைர வர்
அதிர்ஷ்ட எண்: 5,0,5,4, அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H, A




**கடகம்:** செல்வாக்கு மூலமாகவே செல்வாக்கு உயரக்கூடிய வாரம். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். கன்னிப் பெண்களுக்கு சுபச் செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பழைய கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வழிபடவேண்டிய தெய்வம்: வீரஅனுமன்
அதிர்ஷ்ட எண்: 8,5,1,3, அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,L




**சிம்மம்:** பணிவான பேச்சுக்களால் பணவரவை ஈர்த்துக் கொள்ளக் கூடிய வாரம். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். முதலீடு உண்டாகும். தொலை தூர தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசு கரையாது. நினைத்து நடக்கும். அதிதேவதை வழிபாட்டால் ஐஸ்வர்யம் கூடும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செலவுகள் குறையும். வழிபடவேண்டிய தெய்வம்: சித்ரகுப்தர், அதிர்ஷ்ட எண்: 2,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Q




**கன்னி:** தேவைகள் பூர்த்தியாகி ஆசைகள் நிறைவேறும் அற்புத வாரம். மகிழ்ச்சி அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஸ்ரீராமபிரான், அதிர்ஷ்ட எண்: 0,7,2,9
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,X




**துலாம்:** போட்டி பொறாமைகள் மறையக்கூடிய மகத்தான வாரம். தங்க நகைகள் சேரும். கூட்டுத் தொழிலில் கவனம் தேவை. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்கள் கவனம் தேவை. கடன் சுமை அதிகரிக்கும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பிரார்த்தனையால் பலன் உண்டு. வழிபட வேண்டிய தெய்வம்: குரு பகவான்
அதிர்ஷ்ட எண்: 2,1,0,8, அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,D




**விருச்சிகம்:** பயணங்களால் பணவரவு கிடைக்கக்கூடிய பகட்டான வாரம். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். உடல் நலம் சீராகும். மற்றவரால் பாராட்டுப்படுவீர்கள். பயணத்தால் அனுகூலம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புகள் கூடும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். வழிபட வேண்டிய தெய்வம்: ஐங்கரன்
அதிர்ஷ்ட எண்: 1,2,6,9, அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,N




**தனுசு:** எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்த படியே நடக்கக் கூடிய எதார்த்தமான வாரம். குதூகலப் பயணம் உண்டு. நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிக்கும் சம்பவம் அமையும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். தொழில் நிம்மதி கொடுக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். நல்வர் நட்பு உருவாகும். தோல்வி நிலை மாறும் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். வழிபடவேண்டிய தெய்வம்: குபேரபகவான்
அதிர்ஷ்ட எண்: 7,4,6,9, அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**மகரம்:** வம்புதும்புகள் ஒழிந்து வரவுகள் அதிகரிக்கக் கூடிய வாரம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கௌரவமான பணப்பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்கியம் அதிகரிக்கும். வழிபடவேண்டிய தெய்வம்: ஆறுமுகப் பெருமாள்
அதிர்ஷ்ட எண்: 8,6,2,9, அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,O




**கும்பம்:** கலைந்த குடும்பம் ஒன்று சேரக்கூடிய கலகலப்பான வாரம். முத்தான வாய்ப்புகள் பெருகும். பிள்ளைகாளல் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். கௌரவமான கலைத் தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிட தொழில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். வழிபடவேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை
அதிர்ஷ்ட எண்: 1,3,7,1, அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z




**மீனம்:** பணவரவில் லாபமும் உடல் நலத்தில் ஷேமமும் கிடைக்கக் கூடிய வாரம். நட்டம் இல்லாத நாள். பட்டம் பதவி வந்து சேரும். யோ-கமான
பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். வினோதமான எண்ணங்கள் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணியஸ்தலம் செல்ல வேண்டி வரும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். சட்டம் சாதகமாகும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வழிபடவேண்டிய தெய்வம்: கஜமுக கணபதி
அதிர்ஷ்ட எண்: 4,2,0,7, அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,T



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


(17ம் பக்கத் தொடர்ச்சி)

# சிவாஜியும் தமிழ்ச் சினிமாவும்

ஒரு சமயம் "ஜஹாங்கீர்" நாடகத்தில் நூர்ஜஹான் வேடமிட்டு நடிப்பது ஒரு ஆண் நடிகர் அதுவும் கணேசன் என்ற விபரம் தெரியாத சில கிராமப்புற மைனர்கள் இவரை அசல் பெண் நடிகை என்று கருதி கடத்திக் கொண்டுபோக திட்டமிட்டு மேடையின் பின்புறம் ஒளிந்திருந்தார்களாம். நாடகம் முடிந்து "நூர்ஜகான்" டோப்பா முடியை கழற்றி வைத்து கணேசனாக மாறியதும் ஏற்பட்ட அதிர்ச்சியை அவர்களால் தாங்க முடியவில்லையாம்.

மறுநாள் அவர்களே இந்தச் செய்தியை "நூர்ஜகான்" வேடத்தில் இருந்த கணேசனிடம் கூறி அசடு வழிய "ஐயோ! மகமாயி! நான் பிழைச்சேன்" எனக் கணேசன் ஜோக் அடித்து அனைவரையும் விழுந்து விழுந்து சிரிக்க வைத்தாராம். நாடக சினிமா வாழ்க்கையில் இப்படி பல வினோத வேடிக்கை அனுபவங்கள் உண்டு. சமயம் வரும்போது எழுதுவேன்.

இனி இவ்வார தொடரின் முத்தாய்ப்பாக கலைஞர் மு கருணாநிதி அவர்கள் தீட்டிய மனோகரா திரைப்படத்தில் இடம்பெற்ற தர்பார் சீன் உரைவீச்சு மனனம் செய்து உரக்கப் பேசி உற்சாகமடையுங்கள். நடிகர் திலகம் அவர்களுடைய தமிழ் பணிகளில் இதுவும் ஒன்றாகும். தமிழுக்கு முறுக்கேற்றி ஏற்ற இறக்கங்களுடன் பேசிப் பழக வைத்த திரை தந்த ஆசானை வணங்குவோம்!

அதற்கு முன் சிவாஜி அவர்கள் திரையில் அறிமுகமாக முன் நாடக மேடையில் முதன் முதலில் ஆண் வேடம் ஏற்று பேசிய வசனங்களையும் வாசகர்கள் அறியவேண்டும். நாடகத்தில் அகஸ்திய முனிவராக தோன்றி பேசிய வசன வரிகள் ஆவன " வருக! வருக! மங்களம் உண்டாகுக! என் தமிழும் என்றும் வாழ்க! கண்மணிகாள் நீவீர் தயரதன் தரும் மதலைகளன்றோ! ஆ!... என் மக்கால் பற்றற்றாரைப் பற்றுமின். நற்றவக்கோலும் நம்மைப் பற்றிய வாறென்னே!"

இந் நடையை மணிப்பிரவாள நடையென்று கூறுவார்கள்? புரிந்துகொள்வதற்கு கொஞ்சம் வில்லங்கமாக இருக்கும். இந்தப் பௌராணிகத் தமிழிலிருந்து வேறுபட்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் "மனோகரா" தமிழையும் படியுங்கள். "கட்டளையா இது! கரைகாண முடியாத ஆசை! பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து கண்ணே! முத்தே! தமிழ்ப்பெண்ணே! என்றெல்லாம் குலாவிக் கொஞ்சி தந்தத்தால் ஆன கட்டிலிலே சந்தனத் தொட்டினிலே! வீரனே என் விழி நிறைந்தவனே தீரர் வழி வந்தவனே! என்று யாரைச் சீராட்டிப் பாராட்டினீர்களோ... அவனை அந்த மனோகரனை சங்கிலியால் பிணைத்து, சபை நடுவே நிறுத்தி சந்தோசம் கொண்டாட வேண்டும் என்ற தங்கள் தனியாத ஆசைக்கு பெயர் கட்டளையா தந்தையே....! என்றும், "மன்னிப்புக் கேட்கவேண்டும் மனோ-கரன், அதுவும் அரை நொடியில்... அரைநொடி என்ன அதற்குள்ளாகவே! ஆனால்! யாரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் தெரியுமா! கோமளவல்லி! கோமேதகச் சிலை! கூவும் குயில்! குதிக்கும் மான்! என்றெல்லாம் உம்மால் கூறப்படும் இந்தக் கோ-ணல் புத்தி காரியின் (வசந்தசேனையை நோக்கி) கொள்ளி கண்களை குருடாக்கி விட்டு... கொடிய நாக்கை என் கூர்வாளுக்கு இரையாக தந்து.. அதை எதிர்த்தால் உமக்கும் உமக்கு பக்கத் துணையாக வந்த பட்டாளத்தையும், விலக்கிவிட்டு சூனியக்காரிக்கு ஆலவட்டம் சுழற்றியவர்களை சுடுகாட்டிற்கு அனுப்பிவிட்டு சுழலும் வாலுடன் சூழும் புகழுடன் என் அன்னையிடமோடி மன்னிப்பு கேட்க வேண்டும்... நிறைவேற்றட்டுமா அந்த உத்தரவை... தயார் தானா? தயார் தானா? ஏன் தயங்க வேண்டும்!". இவ்வாறு அரச தர்பாரில் சீறும் புயலாக சிம்ம கர்ச்சனையுடன் முழக்கமிடும் சிவாஜி அவர்களின் உரை வீச்சை ஏற்ற இறக்கங்களுடன் பேசிப் பழகுங்கள்!

மனோகரா தர்பார் சீன் படமாக்கும் போது ஜூபிடர் சோமு, இயக்குனர் எஸ் பி பிரசாத் நிருபர்களிடம் வேண்டுகோளுக்கிணங்கி ஒரே டேக்கில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளிலும் வசனம் பேசி நடித்து சாதனை படைத்தவர் சிவாஜி. மானசீகமாக அவரை உங்கள் தமிழ் ஆசானாக வணங்கி தமிழுரை வீச்சை பேசிப் பழகுங்கள். தமிழுக்கும் அமுதென்று பேர்!

- காட்சிகள் விரியும் அடுத்த வாரம்......

# 31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்



அமரர். சண்முகலிங்கம் இராசையா
(தலைமைப் பொறியியலாளர்)

**மண்ணில்** 05-08-1931 **விண்ணில்** 02-07-2020

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு முடமாவடியைப் பிறப்பிடமாகவும்,
கொழும்பை வதிவிடமாகவும் பின்பு கனடாவில் வாழ்ந்தவருமான
அமரர். திரு. சண்முகலிங்கம் இராசையா அவர்களின்
31ம் நாள் நினைவஞ்சலியும், நன்றிநவிலலும்.

அன்பின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய்
பாசத்தை, பரிவை காட்டுவதில் நல்ல தாயாகவும்
காத்திருந்து கடமைகள் பல புரிந்த தெய்வம் நீங்கள்
கடமைகள் பல புரிந்து களைத்து விட்டீர்கள் என நினைந்து
காலனவன் கவர்ந்து விட்டானோ...
நல்லம்மா ஈன்றெடுத்த நல்முத்தே
இம் மானிலத்தில் நீர் விட்ட விதைகள்
காலா காலத்துக்கும் உம் போன்று நல்ல பண்பாளராக வாழவைக்க
நீங்கள் மறைந்தாலும் எம்மை வழி நடத்தும் தெய்வமாக
விண்ணுலகத்தில் இருந்து வாழ்த்த மலர் தூவி பூஜிக்கின்றோம்.

எங்கள் துயரச்செய்தி கேட்டு நேரில் வந்தவர்களுக்கும்,
தொலைபேசியில் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மற்றும்
இணையத்தளம் வாயிலாக எம்மோடு துயர் பகிர்ந்தவர்கள்
அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்**

தகவல்: மனோகரன் (மகன்) 647- 761 5779
உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

# 15ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு:** 22-11-1933 **உதிர்வு:** 03-08-2005



அமரத்துவமாது.
திருமதி. நவநீதம் சண்முகலிங்கம்
(செல்வதி)

**திதி: 18-07-2020**

ஆண்டு பதினைந்து சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
பொறுமையின் பொக்கிஷமே
எங்கள் பெருமைகளின் பிறப்பிடமே
ஆயிரம் நிலவொளியாய் அன்பைப் பொழிந்த அம்மாவே!
கடலலையாய் பாசம் தந்த அம்மாவே!
எம்மைவிட்டு நீங்கள் போகவில்லை - என்றும்
எம் உயிரோடும் உணர்வோடும் வாழ்கிறீர்கள்
அன்பால் எமையணைத்து அமுதமொழி பேசி
இன்பமாய் வாழ வைத்து இனிய முகம் மலர்ந்து
வன்சொல் அறியாது வாழ்ந்த அம்மாவே!
ஆண்டுகள் பல சென்றாலும் அம்மாவின் பாசமுகம்
எங்களுயிர் உள்ளவரை எம்மை விட்டு நீங்காதம்மா!

உங்கள் நினைவால் வாடும்
மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்

தகவல் - என்றும் மாறாத அன்புடன்
ஆசை மருமகள் சுதாஜினி மனோகரன் (சித்திரா)

# அன்பின் தொனி - 571

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபத்தின் வல்லமை.**

**தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்.**

*தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள், நன்மைசெய்கிறவன் ஒருவனும் இல்லை. தேவனைத் தேடுகிற உணர் வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார். எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள், நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. அக்கிரமக்காரரில் ஒருவனுக்கும் அறிவுஇல்லையோ? அப்பத்தைப் பட்சிக்கிறதுபோல, என் ஜனத்தைப் பட்சிக்கிறார்களே, அவர்கள் கர்த்த ரைத் தொழுதுகொள்ளுகிறதில்லை. அங்கே அவர்கள் மிகவும் பயந்தார்கள், தேவன் நீதிமானுடைய சந்ததியோடே இருக்கிறாரே. சிறுமைப்பட்டவனுக்குக் கர்த்தர் அடைக்கலமாயிருக்கிறார் என்று சொல்லி, நீங்கள் அவனுடைய ஆலோச னையை அலட்சியம்பண்ணினீர்கள். சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக, கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது, யாக்கோபுக்குக் களிப்பும், இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்.* **- சங்கீதம் 14: 1-7**

**கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்?**

*கர்த்தாவே, யார் உம்முடைய கூடாரத்தில் தங்குவான்? யார் உம்முடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுவான்? உத்தமனாய் நடந்து, நீதியை நடப்பித்து, மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவன்தானே. அவன் தன் நாவினால் புறங் கூறாமலும், தன் தோழனுக்குத் தீங்குசெய்யாமலும், தன் அயலான்மேல் சொல்லப்படும் நிந்தையான பேச்சை எடுக் காமலும் இருக்கிறான். ஆகாதவன் அவன் பார்வைக்குத் தீழ்ப்பானவன், கர்த்தருக்குப் பயந்தவர்களையோ கனம்பண்ணு கிறான், ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான். தன் பணத்தை வட்டிக்குக்கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய்ப் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான். இப்படிச் செய்கிறவன் என்றென்றைக்கும் அசைக்கப்படுவதில்லை.*
**- சங்கீதம் 15: 1-5**

**கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்.**


*தேவனே, என்னைக் காப்பாற்றும், உம்மை நம்பியிருக்கிறேன். என் நெஞ்சமே, நீ கர்த்தரை நோக்கி: தேவரீர் என் ஆண்டவராயிருக்கிறீர், என் செல்வம் உமக்கு வேண்டியதாயிராமல், பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், நான் என் முழுப் பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும், அது வேண்டியதாயிருக்கிறது என்று சொன்னாய். அந்நிய தேவனை நாடிப் பின்பற்றுகிறவர்களுக்கு வேதனைகள் பெருகும், அவர்கள் செலுத்துகிற இரத்த பானபலிகளை நான் செலுத்தமாட்டேன், அவர்கள் நாமங்களை என் உதடுகளினால் உச்சரிக்கவுமாட்டேன். கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர், என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர். நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது, ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு. எனக்கு ஆலோசனை தந்த கர்த்தரைத் துதிப்பேன், இராக் காலங்களிலும் என் உள்ளிந்திரியங்கள் என்னை உணர்த்தும். கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக் கிறேன், அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை. ஆகையால் என் இருதயம் பூரித் தது, என் மகிமை களிகூர்ந்தது, என் மாம்சமும் நம்பிக்கையோடே தங்கியிருக்கும். என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர். ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர், உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு.*
**- சங்கீதம் 16: 1-11**

**தேவனே, நான் உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன், எனக்குச் செவிகொடுக்கிறீர்.**

*கர்த்தாவே, நியாயத்தைக் கேட்டருளும், என் கூப்பிடுதலைக் கவனியும்ளூ கபடமில்லாத உதடுகளினின்று பிறக்கும் என் விண்ணப்பத்திற்குச் செவிகொடும். உம்முடைய சந்நிதியிலிருந்து என் நியாயம் வெளிப்படுவதாக, உம்முடைய கண்கள் நியாயமானவைகளை நோக்குவதாக. நீர் என் இருதயத்தைப் பரிசோதித்து, இராக்காலத்தில் அதை விசாரித்து, என்னைப் புடமிட்டுப்பார்த்தும் ஒன்றும் காணாதிருக்கிறீர், என் வாய் மீறாதபடிக்குத் தீர்மானம்பண்ணினேன். மனுஷரின் செய்கை களைக்குறித்து, நான் உம்முடைய உதடுகளின் வாக்கினாலே துஷ்டனுடைய பாதைகளுக்கு விலக்கமாய் என்னைக் காத்துக் கொள்ளுகிறேன். என் காலடிகள் வழுவாதபடிக்கு, என் நடைகளை உமதுவழிகளில் ஸ்திரப்படுத்தும். தேவனே, நான் உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன், எனக்குச் செவிகொடுக்கிறீர், என்னிடத்தில் உம்முடைய செவியைச் சாய்த்து, என் வார்த்தையைக் கேட்டருளும். உம்மை நம்புகிறவர்களை அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களினின்று உமது வலதுகரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவரே! உம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப்பண்ணும். கண்மணியைப் போல என்னைக் காத்தருளும். என்னை ஒடுக்குகிற துன்மார்க்கருக்கும், என்னைச் சூழ்ந்துகொள்ளுகிற என் பிராணப் பகைஞருக்கும் மறைவாக, உம்முடைய செட்டைகளின் நிழலிலே என்னைக் காப்பாற்றும். அவர்கள் நிணந்துன்னியிருக்கி றார்கள், தங்கள் வாயினால் வீம்பு பேசுகிறார்கள். நாங்கள் செல்லும் பாதைகளில் இப்பொழுது எங்களை வளைந்து கொண்டார்கள், எங்களைத் தரையிலே தள்ளும்படி அவர்கள் கண்கள் எங்களை நோக்கிக்கொண்டிருக்கிறது. பீறுகிற தற்கு ஆவலுள்ள சிங்கத்துக்கும், மறைவிடங்களில் பதிவிருக்கிற பால சிங்கத்துக்கும் ஒப்பாயிருக்கிறார்கள். கர்த்தாவே, நீர் எழுந்திருந்து, அவனுக்கு எதிரிட்டு, அவனை மடங்கடியும், கர்த்தாவே, என் ஆத்துமாவைத் துன்மார்க்கனுடைய கைக்கு உம்முடைய பட்டயத்தினால் தப்புவியும். மனுஷருடைய கைக்கும், இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கிற உலகமக்களின் கைக்கும் உம்முடைய கரத்தினால் என்னைத் தப்புவியும், அவர்கள் வயிற்றை உமது திரவியத்தினால் நிரப்புகிறீர்ளூ அவர்கள் புத்திரபாக்கியத்தினால் திருப்தியடைந்து, தங்களுக்கு மீதியான பொருளைத் தங்கள் குழந்தை களுக்கு வைக்கிறார்கள். நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன், நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்.* **- சங்கீதம் 17: 1-15**

*தொடரும்...*




SHIRIDI SAI SCHOOL
OF CANADA
ADMISSIONS
OPEN FOR
J/S KINDERGARTEN TO GRADE 6
TO REGISTER YOUR INTEREST PLEASE CALL
416-298-3030
2701 MARKHAM ROAD, SCARBOROUGH


உங்கள் பணத்தேவைகளுக்கு
குறைந்த வட்டிவீதத்தில் அடைவு பிடிக்கப்படும்
PAWN BROKERING
பழைய பவுண்கள் நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்
Cash Point
துரித பணமாற்றுச்சேவை
வெளிநாட்டு நாணயங்கள்
வாங்கவும் விற்கவும்.
Cash Point
3852 FINCH AVENUE EAST,. UNIT G30,
SCARBOROUGH, ON, M1T 3T9
TEL: 416-284-7000


Family Health Team
Carefirst Family Health Team
Accepting New Patients
புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்
தமிழ் பேசும் வைத்தியர்கள்
ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
நீரிழிவு கல்வி திட்டம்
Ontario
Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com
Steeles
McNicoll
Silver Star
Kennedy
Midland
Finch
N

Life Insurance
Don't think twice
Life Insurance Group Benefits
Critical Illness RRSP / RESP
Disability
Investments
INFORCE LIFe Financial Services Inc.
RESP
Registered Education Saving Plans
40% - 20% Goverment Grant
Plus additional 15-10% on us.
Start Saving Early
Ajanthan (Ajay) Thavayogarajah
Insurance and Investments
Call Ajay: 416.704.8074

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
$50 மட்டுமே

23rd Years in Publishing

UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Tel : 416-752-1524
Fax: 416-752-6703

NEW CLASS STARTING
On12th October 2019
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

ONLY LOCATION IN GTA
OCEAN ACCOUNTING TAX CONSULTANTS
Accounting Services for Personal and Small Business
1646 VICTORIA PARK AVE., SUITE 1
PARK PLAZA (BETWEEN LAWRENCE & EGLINTON)
TORONTO, ON. M1R 1P7
TEL: 416-285-6900
FAX: 416-285-4877
Email: OATC@oceantax.ca Web: www.oceantax.ca
Personal & Corporate Income Tax Returns
Complete Accounting Services

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயம் 1269 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 31, 2020

# கனடாவில் ரொறன்ரோ நகரமும் பீல் பிராந்தியமும் மூன்றாம் கட்டத்துக்கு நகர்கின்றன!



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தின் ஆளும் கட்சி தமிழ் பேசும் உறுப்பினரும் ஒன்றாரியோ மாகாண போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான விஜய் தணிகாலசலம் அவர்கள் மேற்படி விடயமாக பின்வரும் விபரங்களை தமிழ் மொழி ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார். அதில் கொரோனா தொடர்பான சுகாதாரக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப நாம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"ஒன்ராறியோ சுகாதார தலைமை அதிகாரியுடன் எமது அரசாங்கம் மேற்கொண்ட ஆலோசனைக்கிணங்க, எதிர்வரும் வெள்ளிக்கிழமை, ஜூலை 31ஆம் திகதியன்று, ரொறன்ரோ நகரமும் பீல் பிராந்தியமும் மூன்றாம் கட்டத்துக்கு நகர்வதென முடிவெடுக்கப்பட்டுள்து. ஒன்ராறியோ மாகாணத்தில் மேலும் பல வணிக மற்றும் பொது இடங்களைத் திறந்து வைக்கும் மேற்படி முடிவானது, இப்பகுதிகளின் சுகாதார தரவுகளின்படி குறைவான நோய்ப்பரம்பல், நோய்த்தொற்றை சமாளிக்க போதியளவு வைத்தியசாலை மற்றும் சுகாதார வசதிகள், அதிகரிக்கப்பட்டுள்ள மருத்துவ சோதனைகள் போன்றவற்றை அடிப்படையாக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மீளத் திறந்து வைப்பதன் மூன்றாம் கட்ட விதிமுறைகளின்படி, அடுத்த கட்டத்துக்குள் நகரும் ஒன்ராறியோவின் பகுதிகளில் மக்கள் ஒன்றுகூடும்போது கடைப்பிடிக்க வேண்டியவை பின்வருமாறு அமையும்:

- உள்ளக ஒன்றுகூடல்களின் போதான வரையறை அதிகப்படியாக 50 பேர் வரை அதிகரிக்கப்படுகிறது.
- வெளியரங்க ஒன்றுகூடல்களின் போதான வரையறை அதிகப்படியாக 100 பேர் வரை அதிகரிக்கப்படுகிறது.
- ஒன்றுகூடுபவர்களின் எண்ணிக்கை தனிமனித இடைவெளி விதிமுறைக்ளுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்."

மேற்கண்டவாறு ஒன்றாரியோ மாகாணத்தின் ஆளும் கட்சி தமிழ் பேசும் உறுப்பினரும் ஒன்றாரியோ மாகாண போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளருமான விஜய் தணிகாசலம், தெரிவித்துள்ளார்.

# கனடா– மார்க்கம் நகரில் அமையவிருக்கும் புகழ்பெற்ற யோர்க் பல்கலைக்கழகத்தின் புதிய வளாகம்





கடந்த வெள்ளிக்கிழமை, ஒன்ட்டாரியோ மாகாண அரசு York பல்கலைக்கழகத்தின் புதிய மார்க்கம் மைய வளாகத்திற்கு ஆதரவை அறிவித்து மார்க்கம் Pan-Am Centreல் ஒன்றாரியோ மாகாண முதல்வர் Doug Ford அவர்களால் அங்குரார்ப்பண வைபவம் செய்யப்பெற்றது.இது மார்க்கம் பகுதியில் பொது உதவி பெறும் முதல் பல்கலைக்கழகமாகும்.
இது பற்றி ஒன்றாரியோ மாகாண அரசின் தமிழ் பேசும் உறுப்பினர்களில் ஒருவரான திரு லோகன் கணபதி கருத்துத் தெரிவிக்கையில்,
"இந்த பல்கலைக் கழக வளாகமானது, York பிராந்திய மார்க்கம் பகுதிகளுக்கான ஓர் முக்கிய திருப்பு முனையான அறிவிப்பாகும். நான் மார்க்கம் நகர சபையின் கவுன்சிலராக இருந்த நாட்களிலிருந்து இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான செயற்குழுவில் அங்கத்தவராக இருந்து பணிபுரிந்துள்ளேன், இப்போது எங்கள் குழுவின் கடின உழைப்பு அனைத்தும் பலனளிப்பதைக் காணும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது".

புதிய மார்க்கம் வளாகம் இந்த மாதத்தில் கட்டுமானப் பணிகளைத் தொடங்கும், இது York பிராந்தியத்தின் COVID-19 க்குப் பிந்தைய பொருளாதார மீட்சிக்கு உதவும். இந்த புதிய வளாகம் 350 மில்லியன் டாலர்களுக்கு உடனடி பொருளாதார நன்மைகளை ஈட்டுவதாகவும் 2,000 க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
York பல்கலைக்கழகத்தின் புதிய மார்க்கம் மைய வளாகம் 2023 இலையுதிர் காலத்தில் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
மேலும் இளங்கலை மற்றும் பட்டதாரி மட்டங்களில் தொழில்நுட்பம், வர்த்தகம், தரவு அறிவியல் மற்றும் தொழில் முனைவோர் ஆகிய துறைகளில் அதிக தேவை உள்ள துறைகளில் பல்கலைக்கழக திட்டங்களுக்கு York பிராந்திய மாணவர்களுக்கு அதிக சந்தர்பங்களை வழங்கும். இந்த வளாகத்தில் 400,000 சதுர அடிக்கு மேற்பட்ட இடம் அமைந்துள்ளது, மேலும் 4,200 மாணவர்களுக்கு அனுமதி அளிக்க முடியும்.இந்த வளாகம் திறக்கபட்ட பின்புஆண்டுக்கு54 மில்லியனை மாகாணத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
மார்க்கம் மற்றும் York பிராந்தியத்தைச் சூழ உள்ள மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் குடும்பங்கள் இப்போது அவர்களுக்கு அண்மையில் அதிக மலிவான, வசதிகளுடன் கூடிய கல்வியைப் பெறக்கூடியதாக அமையும். இந்த புதிய வளாகம் எங்கள் சமூகத்தில் பாரிய நன்மைகளையும், பொரளாதார மேம்பாட்டையும் ஏற்படுத்தும் என்று துணிந்து கூறமுடியம்."என்றார். இங்கே காணப்படும் படங்கள் கடந்த வெள்ளிக்கிழமையன்று எடுக்கப்பெற்றவையாகும்.

# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் சசிகலா ரவிராஜ்



நடைபெறவுள்ள 2020- இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் சசிகலா ரவிராஜ் அவர்களுக்கு வாக்களிக்கும்படி கனடாவில் வாழும் சட்டத்தரணியும் மறைந்த ரவிராஜ் அவர்களின் சகோதரியுமான வாசுகி தேவதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். சசிகலா ரவிராஜ் அவர்களுடைய சின்னம்- வீடு: இலக்கம் -3 ஆகும்.
தனது மைத்துனியும், சுட்டுக்கொல்லப்பட்ட சட்டத்தரணி ரவிராஜ் அவர்களின் துணைவியாருமான வேட்பாளர் சசிகலா இரவிராஜ் அவர்களுக்கு அனைவரும் ஆதரவை வழங்குமாறு கனடாவில் வாழும் அன்பர்களைக் கேட்டுக் கொள்ளும் சட்டத்தரணி வாசுகி தேவதாஸ், தாயகத்தில் உள்ள தங்கள் உறவினர்களோடு தமது வேண்டுகோளைப் பகிர்ந்து கொள்ளுமாறு இந்தச் செய்தியின் ஊடாக வேண்டுகின்றார். (விபரமான விளம்பரம் உள்ளே காணப்படுகின்றது)

**சமூக ஆர்வலராகவும் தொழிலதிபராகவும் நன்கு அறியப்பெற்ற பவதாரணி ராஜசிங்கம் அவர்கள், யாழ் என்னும் தாய் மண்ணில் தேர்தலில் களமிறங்கி தனது மக்களுக்கு சேவையாற்ற வந்துள்ளார்.**

